JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா

அனுதினமும்

2015 ஜனவரி

40 வது வெளியீடு



"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ (2015 இவ் வருடம்) புதுப்பெலன் அடைந்து, **கழுகுகளைப்போலச்** செட்டைகளை அடித்து (இன்னும் உயர) எழும்புவார்கள்;..."

ஏசாயா 40:31




# அட்டைப்பட விளக்கம்

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இம்முறை ஜீவ மன்னா தின மஞ்சரியின் அட்டைப் படத்தில் காணப்படுவது இளம் கழுகு ஆகும். பறவைகளின் கழுகானது பல விஷேடத் தன்மைகளைக் கொண்டுள்ளபடியால் வேதாகமம் தேவ வசனத்தில் கழுகை எமது ஆத்துமாவோடு ஒப்பிட்டுக் கூறுகின்றது.



ஏனென்றால் சங்கீதம் 103:5இல் எழுதப்பட்டுள்ளதாவது நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். "கழுகுக்குச் சமானமாய் உன் வயது வால வயது போலாகிறது என்றாகும்." கழுகின் விஷேடத் தன்மை என்னவென்றால் சிறு குஞ்சு கழுகானது வளர்ந்து பெரிதாகுவது போல அது முதிர்வயதடைந்த பின்னர் மீண்டுமாக இளம் கழுகைப் போன்று மாறிவிடுவதாகும்.

எப்படியெனின் முதிர் வயது கழுகின் சிறகுகள் அனைத்தும் உதிர்ந்து மீண்டுமாக புதிதாக சிறகுகள் வளரும் வரை அது கன்மலையில் மறைந்து பாதுகாப்பாக இருக்கும்.



சிறிய கழுகுக் குஞ்சுவினுடைய சிறகுகள் வளருவதற்கு முன்னர் அது எவ்வண்ணமாக இருக்குமோ சிறகுகள் உதிர்ந்த முதிர்வயதுடைய கழுகினுடைய சுபாவமும் அப்படியே இருக்கும். கழுகின் குஞ்சுகளின் சிறகுகள் வளர்ந்து அது அழகு நிறைந்த வாலிப நிலையை அடைகின்றது. முதிர் வயதுடைய கழுகும் புதிய சிறகுகள் வளரப்பெற்று மீண்டுமாக வாலிப கழுகினைப் போல மாறிவிடும். தேவ பிள்ளைகளே! எங்கள் சர்வ வல்லமையுள்ள பரலோக பிதாவானவரின் ஒழுங்கு முறைகள் எவ்வளவு ஆச்சரியமானவைகள்? என்று உங்களுக்கும் எண்ணத் தோன்றுகிறதல்லவா? தேவன் உலகில் தேர்ந்தெடுத்து வேறுபடுத்தப்பட்ட நீங்கள் தேவனுக்குள் வாழ்வீர்களாயின் தேவ வசனத்திலுள்ளபடி கழுகினைப் போன்று வாலிபப்பருவத்தை மீண்டுமாக புதிதாக பெற்றுக் கொள்வீர்கள் என்பதை உள்ளத்தின் ஞாபக ஏட்டில் பதித்துக் கொள்ளுங்கள்.

அப்படியே நீங்கள் தேவனையே நோக்கிய வண்ணமாகக் காத்திருக்கும் போது தேவன் உங்கள் ஆத்துமாவை புது பெலனினால் நிரப்புகிறார் தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. எப்படியெனின் "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப் பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்'' என ஏசாயா 40:31இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் 2014 வருடம் முடிவடைந்து 2015வது புதிய வருடத்தில் கால் வைக்கும் நீங்கள் அனைவரும் உங்கள் வாலிபப்பருவத்தை புதிதாக்கி கழுகினைப் போன்று உற்சாகத்தோடு, புதிய பெலனோடு புதிய வருடத்தில் கால் வையுங்கள்.





தேவ பிள்ளைகளே! பறவைகளின் மத்தியில் ஆகாயத்தில் மிக உயரத்தில் பறப்பது கழுகாகும். அப்படியே எத்தகைய வெள்ளம், சூறாவளி, புயல்காற்றுக்கு மத்தியிலும் ஆகாயத்தில் உயர்ந்து பறக்கக் கூடிய மிகத்திறமை உடைய பறவை கழுகு ஒன்றே ஆகும். இன்னுமாக எதிரிகளின் தாக்குதல்கள் ஏற்படாத வண்ணம் மிகவும் உயர்ந்த கன்மலையில் கூடு அமைத்து முட்டையிட்டு குஞ்சுகளை காத்துக் கொள்வதும் இந்த கழுகு என்றால் மிகையாகாது. மேலே ஆகாயத்தில் உயர பறந்து கொண்டிருக்கையிலேயே இப்பூமியில் காணப்படுகின்ற இரையைக் கண்டு உடனடியாக கீழே பறந்து வந்து பற்றிப் பிடித்துக் கொள்ளும் திறமை இந்த கழுகுக்கு மாத்திரமே உண்டு. அதனது

☛ 2

# மகிமை பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கே

## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே.

**2015 புதிய ஆண்டில் ஆவிக்குரிய வாழ்வில் புதிய பெலன் பெறுங்கள்**

ஜீவ மன்னா தின மஞ்சரியின் 40வது வெளியீட்டை கரங்களில் பெற்றுக் கொண்டிருக்கிற எனது அன்பு நிறைந்த வாசகர்களான உங்கள் அனைவருக்கும் பிறந்த இந்த 2015வது புதிய ஆண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், இவ்வுலக ஆசீர்வாதங்களும் பெருக்கெடுத்தோடும் மகிழ்ச்சிகரமான வருடமாக வேண்டுமென இணையில்லாத இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உள நிறைவோடு வாழ்த்துகின்றேன். இம்மட்டும் உதவி செய்த என் கர்த்தருக்கு ஸ்தோத்திரங்கள்.

கடந்த வருடம் முழுவதும் ஜீவ மன்னா தின மஞ்சரியின் ஒரு வெளியீடாவது காலத் தாமதமின்றி தொடர்ந்தும் பன்னிரெண்டு மாதங்களும் உங்களுக்கு ஏற்ற வேளையில் அனுப்புவதற்காக தேவனின் மகாகிருபை, அநுக்கிரகம் எங்களுக்குக் கிடைக்கப் பெற்றமையால் தேவனுக்கே முதற் கண் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இந்த தின மஞ்சரியை வாசித்து இதற் கூடாக தமது ஆத்மீக வாழ்வை பெலப்படுத்தி கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்ற சில சகோதர, சகோதரிகள் அவர்களது வாசகக் கட்டணங்களிலும், ஸ்தோத்திர காணிக்கைகளுக்கூடாகவும் வருடம் முழுவதும் எங்களோடிணைந்து கரம் பிடித்து உதவி செய்தமைக்காக எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இன்னுமாக வாசக சகோதர, சகோதரிகள் இடைக்கிடை அவர்களது விஷேசித்த கொடுப்பனவுகளால் இந்த வெளியீட்டை தொடர ஆதரவளித்தார்கள். அனைவருக்கும் நானும் இயேசுகைவிடார் சுவிஷேச பணியகத்தில் கடமை புரியும் ஊழிக்காரர்கள், என் குடும்பத்தினர் அனைவரும் முழு உள்ளத்தோடும் நன்றி கூறுகின்றோம்.

தேவ பிள்ளைகளே! புது வருடத்திலே ஜீவ மன்னா தின மஞ்சரியில் இன்னும் அதிகமான ஆவிக்குரிய செய்திகளைத் தயாரித்து தொகுத்தளிக்கலாமென எதிர்பார்க்கின்றேன். தேவனுடைய சமுகத்தில் ஜெபத்தோடும், உபவாசத்தோடும் இருக்க எனக்காக ஜெபிக்கும்படியாக உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். இன்னுமாக உங்கள் ஆவிக்குரிய ஆலோசனைகள் கருத்துக்கள் இருப்பின் எமக்கு எழுதி அறிவிக்க மறவாதீர்கள். புதிய வருடத்தில் எமக்கு அவைகள் ஆவியில் பெலன் பெற உற்சாகத்தை அளிப்பவைகளாக இருக்கும். சென்ற வருடத்தைப் போன்றே இப்புதிய வருடத்திலும் உங்கள் வாசகக் கட்டணங்கள் மூலமாகவும், சந்தோஷக் கொடுப்பனவுகளினாலும் 2015 வது வருடத்திலும் எமது சுமையின் ஒரு பகுதியைத் தாங்கி உங்கள் பரலோக பிதாவின் திரளான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாக வாழ்த்துகின்றேன். 2015ம் வருடத்தில் உங்கள் அபிலாஷைகள் நிறைவேற வேண்டுமென வாழ்த்தி உங்களுக்காக ஜெபிக்கின்றோம். தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

பன்னிரெண்டு மாதங்களும் தவறாது வந்த ஜீவமன்னா
புதிய ஆண்டில் புதுப்பெலன் தந்திடும் ஜீவமன்னா
பரத்திலிருந்து ஞானத்தை அருளிடும் ஜீவமன்னா
2015வது வருடத்தில் கழுகைப்போல உயர்த்திடும் ஜீவமன்னா

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவுக்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

**ஜீவ மன்னா**

**ஜனவரி 01**

**வியாழன்**

**மரணத்தை தோல்வியுறச் செய்யும் விசுவாசத்தை உங்களுக்குள் கட்டியெழுப்புங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு

வெளி. அதி: 12 – 13

**"இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்."** (பரி.லூக்கா 8:50)

அருமையான தேவ ஜனங்களே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் புது வருடத்தின் முதல் தினத்தில் கால் வைத்த உங்கள் அனைவருக்கும் எனது குடும்பத்தில் நான் எனது மனைவி, பிள்ளைகள் உட்பட எனது உடன் ஊழியக்காரர்கள் அனைவரும் உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் **2015வது வருடமானது மகிழ்ச்சிகரமானதும், தெய்வீக சமாதானமும் நிறைந்த வருடமாகட்டுமென வாழ்த்துகின்றோம்.** கடந்த வருடம் முழுவதும் இன்று பிறந்த இப் புது வருடத்திலும் உங்களோடிருக்கிறார் என்பதை **விசுவாசித்து நீங்கள் நம்பிக்கையுடன் வருடத்தை ஆரம்பியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! சென்ற வருடத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருந்த காரியங்களை எண்ணி கவலைக் கொள்ளாதீர்கள். ஏனென்றால் எங்கள் **தேவன் எங்களுக்கு முந்தினவைகளை நினைக்க வேண்டாம். பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்.** "இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும் நீங்கள் அதை அறியீர்களா? என **ஏசாயா43:18,19**இல் கூறியிருக்கிறார். ஆகையால் சென்ற வருடத்தில் உங்கள் வாழ்வில் நிறைவேறாத எதிர்ப்பார்ப்புக்கள், மனவிருப்பங்கள் என்பவைகளைக் குறித்து எண்ணியெண்ணி வருந்தாது **பிறந்த இப்புதிய வருடத்தில் அதற்கும் மேலதிகமான ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்பதனை விசுவாசியுங்கள்.** தேவனிடம் நீங்கள் கேட்பதற்கும் மேலதிகமாக ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்று நம்பிக்கை வையுங்கள். தேவன் நீங்கள் விண்ணப்பிக்கிறதற்கும், நீங்கள் நினைக்கிறதற்கும் அதிகமாக பெற்றுத் தர தேவன் கிரியைகளில் வல்லவராயிருக்கிறார். இன்றைய நாளில் **பரி.லூக்கா 8:50**இல் வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது யவீரு என்னும் ஜெப ஆலயத் தலைவனுக்கு இயேசுகிறிஸ்துவினால் கூறப்பட்ட வசனமாகும். தேவன் அங்கே அவனுக்குக் கூறியதாவது **பயப்படாதே! விசுவாசமுள்ளவனாயிரு அப்பொழுது அவன் இரட்சிக்கப்படுவான் என்றாகும்.**

தேவ பிள்ளைகளே! அவனது பனிரெண்டு வயது மகள் நோய்வாய்ப்பட்டு மரணத்தருவாயில் இருந்தபடியினால் அவளை சுகப்படுத்துவதற்காக தன் வீட்டிற்கு இயேசுகிறிஸ்துவை வரும்படி வேண்டிக் கொண்டான். அப்பொழுது ஜெப ஆலயத் தலைவனான யவீருவின் வீட்டிலிருந்து ஒருவன் வந்து அவனை நோக்கி உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள். போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான். ஆனாலும் இயேசுகிறிஸ்து பதிலாக **பரி.லூக்கா 8:50இல் இவ் வசனத்தைக் கூறி அவனோடு அவனது அவனது வீட்டிற்குப் போய் அவனது ஒரே மகளுடைய கையைப் பிடித்து பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது. ஆகையால் நீங்கள் கலங்காதிருங்கள்**! இன்றும் நீங்கள் இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசம் கொண்டீர்களாயின் உங்கள் வாழ்க்கையில் இப்புதிய வருடத்தில் தேவன் புதிதான காரியங்களை, அற்புத அடையாளங்களை, **ஏற்ற நேரத்தில் ஏற்ற காரியங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார். வெற்றிகரமான நாள்**!

**ஜெபம்**

என் தேவனே! பிறந்த இப்புதிய வருடத்திற்காக ஸ்தோத்தரிக்றேன்! கடந்த வருடம் முழுவதுமாக என்னை முன்னோக்கி வந்தபடியாலும், என்னை ஆசீர்வதித்து முன்னோக்கிக் கொண்டு செல்லப் போகின்றபடியாலும் ஸ்தோத்தரிக்கின்றேன். இயேசுவின் நாமத்தில்.~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் என்றார். "
(பரி.மத்தேயு 22:32)

ஜீவ மன்னா

ஜனவரி 02 வெள்ளி

## நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருக்கிறார் !

இன்றைய வேதவாசிப்பு

வெளி. அதி: 14 – 15

**"இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்."** (சங்கீதம் 147:3)

அருமையான தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜீவனுள்ள தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களான **நீங்கள் மகிழ்ச்சிகரமான ஒரு நல்ல நாளைப் பெற்றுக் கொண்டீர்கள் என விசுவாசத்தோடு இன்றைய நாள் காலைப் பொழுதினிலே வாழ்த்துகின்றேன்.** சிலுவை மரணத்தில் தனது ஜீவனை அர்ப்பணித்து மனிதர்களை பாவத்தினின்று மீட்டுக் கொள்ள கிரியை செய்த ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்து கொண்ட **சிருஷ்டிப்பின் தேவ பிதாவானவரின் சொந்த பிள்ளைகளான நீங்கள் அதிரஷ்டக்காரர்களாவீர்கள்!** ஏனெனில் அவர் உங்கள் உள்ளத்திற்கு மிக சமீபமாயிருக்கிற தேவனாவார்.

தேவ பிள்ளைகளே! எங்கள் ஆவிக்குரிய வாழ்வைப் பாதுகாத்துக் கொள்ள எங்கள் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள நாங்கள் எப்போதும் முயற்சி செய்துக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் பரிசுத்த தேவனானவர் எங்களை பரிசுத்த ஸ்தலத்திற்கு அழைத்துக் கொண்டமையால் **பரலோக இராஜ்யத்தின் உரிமையை எமக்குத் தந்து ஜீவகிரீடத்தை எமக்கு உரிமையாக்கித் தருவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.** எங்களது பரிசுத்த வாழ்வின் பயணத்திற்கு விரோதமாக எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு விரோதமாக **உலகத்தில் அனேக உபத்திரவங்கள், சோதனைகள், பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு.** இவைகளின் காரணமாக பல வேளைகளில் எங்கள் உள்ளத்தில் வேதனைகள், மனக்கலக்கஷடங்கள் ஏற்படலாம். ஏனென்றால் **மனிதனது உள்ளத்தை பலவீனப்படுத்தி, அதைரியப்படுத்தி மனிதனது ஆத்மீக பெலத்தை நிர்மூலப்படுத்த சாத்தான் அனைத்து சந்தர்ப்பங்களிலும் உள்ளத்திற்கு வேதனைகளைக் கொடுத்து கவலைக்குள்ளாக்க சாத்தான் முற்படுவான்.** அதன் நிமித்தம் ஏற்படுகின்ற மன வேதனைகளை தாங்கிக் கொள்ள இயலாமல் உலக மனிதர்கள் தற்கொலை கூட செய்து கொள்கின்றார்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு தேவ பிதாவானவரின் பாதுகாப்பு கிடைப்பதனால் அவர்களின் வாழ்க்கை காக்கப்படுகின்றது. அதைக் குறித்தே **சங்கீதம் 147:3**இல் **"இருதயம் நொருங்குண்டவர்களைக் குணமாக்குகிறார்."** அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார் என்று எழுதப்பட்டுள்ளது. ஆகையால் **நீங்கள் வேதனைக்குள்ளாக்கும் எல்லா வேளைகளிலும் உங்கள் இருதயம் நொறுங்குண்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவ சமுகத்தில் முழங்கால்படியிட்டு அவருக்கு ஜெபங்களை ஏறெடுங்கள்.** அப்பொழுது உங்கள் உடைந்த உள்ளத்தை தேவன் சுகப்படுத்தி உங்கள் இருதயத்தில் ஏற்பட்ட காயங்களைக் குணமாக்கி உங்களை ஆறுதல் படுத்துவாராக! உலகத்து மனிதர்களைப் பாக்கிலும் பரலோக தேவனைக் குறித்தறிந்து கொண்ட **நீங்கள் பாக்கியவான்கள்** என்பதனை உள்ளத்திற் கொண்டு அனைத்து வேதனைகளையும் தேவனிடம் கூறி தேவனுடன் சமீபித்திருக்கும் போது **உங்கள் உடைந்த உள்ளத்தை அவர் சுகப்படுத்துவாராக! இன்றைய நாள் ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு மிகச் சமீபமாகி அவர்களைச் சுகப்படுத்துவதால் ஸ்தோத்தரிக்கின்றேன். தேவனே நீங்கள் என் உள்ளத்தை காண்கிறீர்கள். என் நொருங்குண்ட உள்ளத்தை சுகப்படுத்துங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்." (சங்கீதம் 34:18)

ஜீவ மன்னா

ஜனவரி 03

சனி

## பூமியை ராஜரீகம் பண்ணும் சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்!

இன்றைய வேதவாசிப்பு

வெளி. அதி: 16 – 17

"கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார்;..." (சங்கீதம் 93:1)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் **வல்லமையான நாமத்தினால் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி காலையிலே அவரது கிருபையினால் திருப்தியாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் சிருஷ்டிப்பின் தேவன் இராஜாதி இராஜன் ஆவார். அவர் ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவர் ஆகையால் **அவரின் சொந்த பிள்ளைகளான நாங்களும் இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களாவோம்.**

தேவ பிள்ளைகளே! மேலே கொடுக்கப்பட்டுள்ள **சங்கீதம் 93:1**இல் எழுதப்பட்டிருப்பதாவது, தேவன் ராஜரீகம் பண்ணுகிறார். மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார் என்றாகும். **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்த பூமியை ராஜரீகம் பண்ணுவதால் எங்களுக்கும் அப்படியாக பூமியில் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் **தேவன் ஆரம்பத்தில் மனிதனை உருவாக்கி அவனை ஆசீர்வதித்து பூமியில் அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள் என்றார்.** இன்றும் ஆண்டு கொள்ளும் அதிகாரம் தேவ பிள்ளைகளாகிய எங்களுக்கு இருப்பதைப் பற்றி அறிவீர்களா? ஆனாலும் ஆவிக்குரிய பிள்ளைகளாகிய எமக்கு அன்றன்று வாழ்வில் பலவித உபத்திரவங்களுக்கு முகம் கொடுக்கும் வேளைகளில் எங்கள் உள்ளம் கலங்கிட **நாம் யார்? என்பதனை மறந்து மனம் கலங்குகின்றோம்.** ஆனாலும் அவ்வேளைகள் எங்கள் எதிராளியான சாத்தானுக்கு எங்களைத் தோல்வியுறச் செய்ய சந்தர்ப்பங்களாக அமைகின்றது.

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவன் வல்லமையான தேவன் என்றும் அவரது தேவ ஆவி எங்களுக்குள் இருக்கின்றதென்பதையும், நாங்கள் எல்லா வேளையிலும் நினைவில் கொள்ள வேண்டும். அப்பொழுது உலகில் எங்களுக்கு **எந்த பிரச்சினைகள், உபத்திரவங்கள், சவால்கள் எதிர் நோக்கினும். அவையொன்றிற்கும் பயப்படாது முகங்கொடுத்து வெற்றி பெற்றுக் கொள்கின்ற தைரியம், பெலன் எங்களுக்குள் இருக்கின்றது.** ஏனென்றால் உலகினை ராஜரீகம் செய்கின்ற தேவனின் தேவ ஆவியானவர் உங்களுக்குள் வாசம் பண்ணுகையில் உங்கள் வாழ்வில் ஏற்படுகின்ற உபத்திரவங்கள், சவால்கள் சோதனைகளின்று ஜெயம் பெறச் செய்யும் வல்லமையும் உங்கள் கூடவே இருக்கின்றது. "**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**" ஜெபத்தினால் ஆவியானவரோடு சமீபித்து இவ் உலகினை ஜெயிக்கும்படியாக தேவனைக் கிட்டிச் சேருங்கள். தேவ பிள்ளைகளே! ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற முடியாதபடி உங்களைத் தடுக்கிற சகல மாம்ச விருப்பங்களையும், உலக அன்பையும் விட்டுப்பிரிந்து **கர்த்தரைப் பின்பற்றுங்கள். இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்களே இந்த பூமியை ராஜரீகம் செய்கின்ற தேவனாவீர்கள். நான் உங்களுடைய சொந்த பிள்ளையாதலால் எனக்கும் இந்த பூமியை ஆண்டு கொள்ளும் அதிகாரம் கிடைத்துள்ளது. எனது வாழ்வில் வெற்றி பெற பெலன் தந்து உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப்போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்." (மீகா 2:13)

ஜீவ மன்னா

ஜனவரி 04 ஞாயிறு

# இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு

வெளி. அதி: 18 – 19

**"உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர்."**
(சங்கீதம் 93:2)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு அடைக்கலமாயிருக்கிற கர்த்தரையே ஆதாயமாக்கிக் கொண்ட உங்களை இக்காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** வானத்தையும், பூமியையும் படைத்து ஆளுகை செய்கின்ற மகா வல்லமையுடைய இராஜாதி, ராஜானாகிய எமது சிருஷ்டிப்பின் தேவ பிதா இன்றும் ஜீவனுள்ளவராக வாசம் பண்ணுகின்றார். ஆகையால் **அவரது பிள்ளைகளாகிய நீங்களும் நாமும், அதிர்ஷ்டக்காரர்கள்** ஏனென்றால் தேவன் நித்திய நித்தியமாக தேவனாக இருப்பதனால், **இஸ்ரவேல் புத்திரர்களோடு எவ்வாறாக இருந்தாரோ, மோசேஸ், யோசுவா, தாவீது, எசேக்கியா** இவர்களோடு எப்படியாக கிரியை செய்தாரோ இன்றும் அவ்வண்ணமாகவே தேவன் எங்களோடும் இருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** மேலே சொல்லப்பட்ட **சங்கீதம் 93:2**இல் எழுதியிருப்பதாவது "உமது சிங்காசனம் பூர்வ முதல் உறுதியானது நீர் அநாதியாயிருக்கிறீர் என்றாகும். எங்கள் தேவன் சர்வ பராக்கிரமுள்ள தேவனானவர். தேவன் மோசேயோடிருந்து செங்கடலை இரண்டாக பிளவுறச் செய்து பாதையை உருவாக்கி இஸ்ரவேலரை முன்னோக்கிக் கொண்டு வந்த தேவனானவர் அப்படியே அவர்களுக்கு தாகமாயிருந்த போது ஒரேப் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படச் செய்தார். தேவன் 40 வருடங்கள் முழுவதுமாக **"மன்னா" எனும் ஆகாரத்தில் இஸ்ரவேல் ஜனங்களைப் போஷித்தார்.** இன்னும் யோசுவாவோடு இருந்து யோர்தானுக்கு நடுவில் பாதையை உருவாக்கி இஸ்ரவேல் ஜனங்களை எரிக்கோவிற்கு நடத்திக் கொண்டு சென்ற தேவனாவார். தன் தகப்பனின் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் தாவீதுக்கூடாக பெலிஸ்தியனான கோலியாத் எனும் வீரனை தோல்வியுறச் செய்த தேவன் **மேலும் ஈசாயின் மகனான தாவீதை இஸ்ரவேலருக்கு இராஜாவாக ஏற்படுத்திய தேவனாவார்.**

தேவ பிள்ளைகளே! அது மாத்திரமின்றி எசேக்கியா மரணத்திற்கேதுவான நோயால் பாதிக்கப்பட்ட வேளை **அவரது விண்ணப்பத்தைக் கேட்டு இதோ உன் நாட்களோடே பதினைந்து வருடங்களை கூட்டுவேன் எனக் கூறி 15 வருடங்களைத் தேவன் கூட்டினார்.** கர்த்தர் அநாதி தேவனாக நித்திய காலமும் ஜீவிக்கின்ற தேவனாக இருப்பதனால் இன்றைய நாளில் உங்கள் வாழ்க்கையில் வல்லமையான காரியங்களைச் செய்வதற்கு, உங்கள் வாழ்வில் மேலோங்கிக் காணப்படும் பிரச்சினைகளுக்கு பதிலைப் பெற்றுத் தர அவருக்கு முடியாதிருக்குமோ? **உங்கள் உள்ளத்திலிருக்கும் சகல வேதனைகளையும் அகற்றி தேவனை நோக்கி ஜெபியுங்கள்.** விசுவாசிப்பீர்களாயின் தேவனின் வல்லமையான கிரியைகளை **நீங்களும் காண முடியும். வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் பூர்வகாலமுதல் வாசம் பண்ணும் தேவன் நீங்கள் என்னோடு மிக வல்லமையாக வாசம் பண்ணுகிறீர்கள் என்பதனை விசுவாசிக்கின்றேன். எனக்கு இன்று உங்கள் கிரியைகள் விளங்கும்படியாகச் செய்யும். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்." (வெளிப்படுத்தல் 1:8)

ஜீவ மன்னா

ஜனவரி **05**
திங்கள்

வாழ்க்கையில்
எதிர் நோக்கும்
பிரச்சினைகளினால்
உங்கள் உள்ளம்
சஞ்சலப்படாதிருப்பதாக !

இன்றைய
வேதவாசிப்பு

வெளி.
அதி: 20 – 21

**"சீரியர் எப்பிராயிமைச் சார்ந்திருக்கிறார்களென்று தாவீதின் குடும்பத்துக்கு அறிவிக்கப்பட்டபோது, ராஜாவின் இருதயமும் அவன் ஜனத்தின் இருதயமும் காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறதுபோல் அசைந்தது."** (ஏசாயா 7:2)

அருமையான தேவ ஜனங்களே! ***ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் வாழ்வில் வளம் பெற்று மகிழ்ந்திருக்குமாறு இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.*** மனிதர்களாக இவ்வுலகில் ஜீவிக்கின்ற எங்களுக்கு பலவிதமான சந்தர்ப்பங்களில் ***நாங்கள் முகங் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், உபத்திரவங்கள், சவால்கள், ஆகியவைகள் எம்மை அணுகுமிடத்து எங்கள் உள்ளம் சஞ்சலப்படுகின்றது.*** ஐயோ இப்பொழுது நான் என்ன செய்வது? நான் இந்த பிரச்சினையிலிருந்து விடுதலை பெறுவது எப்படி? என்று எங்கள் உள்ளத்தில் நாம் நினைக்கலாம். ஆனாலும் ***நீங்கள் கலங்காதிருங்கள்!***

தேவ பிள்ளைகளே! மேலே குறிப்பிட்ட பிரதான தேவ வசனத்தில் எழுதியுள்ளதன்படி இப்படியொரு சந்தர்ப்பம் ***யூதாவின் இராஜாவான ஆகாஸ் இராஜாவிற்கு ஏற்பட்டது.*** ஏனெனின் சீரியர் எருசலேமிற்கு விரோதமாக யுத்தம் செய்வதற்கு வந்து எப்பிராயீமில் கூடாரம் அமைத்துக் கொண்டார்கள். ***"சீரியர் "எப்பிராயீமைச் சார்ந்திருக்கிறார்களென்று தாவீதின் குடும்பத்திற்கு அறிவிக்கப்பட்ட போது ராஜாவின் இருதயம் அவன் ஜனத்தின் இருதயமும் காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறது போல அசைந்தது"*** என்று ***ஏசாயா 7:2*** இல் எழுதப்பட்டுள்ளது. ஆனாலும் ***தேவன் ஏசாயா தீர்க்கதரிசியிடம் இவ்வண்ணமாகக் நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப் பார் உன் இருதயம் துவள வேண்டாம்.*** என ஆகாஸ் ராஜாவிடம் அனுப்பினார். தேவன் உங்களுக்கும் இவ்வண்ணமாகவே கூறுகின்றார். உங்களுக்கு விரோதமாக எழும்புகின்ற மனிதர்கள் காரணமாக இன்றைய நாளில் நீங்கள் முகங் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், சவால்கள், துன்பங்களைக் குறித்து ***பயப்படாதீர்கள்.*** ஆகாஸ் இராஜாவை ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் தைரியப்படுத்திய தேவன் இன்றும் ***உங்களோடு ஜீவனுள்ளவராக இருக்கின்றார்.***

தேவ பிள்ளைகளே! எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து ***பரி.யோவான் 14:27***இல் ***"உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக,"*** எனக் கூறியிருக்கிறார். ஆகையால் ***உங்கள் உள்ளத்தை தைரியப்படுத்திக் கொள்ளுங்கள்.*** உங்கள் தேவன் இயேசுகிறஸ்துவுக்கூடாக இன்னும் உங்களுக்கு உதவி செய்வாராக! தேவன் பேரில் உங்கள் விசுவாசத்தை அதிகரித்துக் கொண்டு வாழ்க்கையின் எல்லா காரியங்களுக்கும் முகங் கொடுங்கள். எல்லா வேளையிலும் ***நீங்கள் விசுவாசத்தோடு ஜெபம் செய்யுங்கள். தேவ வசனத்தை ஒவ்வொரு நாளும் வாசித்து வசனத்தில் நிலைத்திருங்கள்.*** அப்பொழுது மலைகளைப் போல உங்கள் பிரச்சினைகள் விசாலமானதெனினும் உங்கள் உள்ளம் கலங்குவதில்லை. நீங்கள் அதற்கு பயப்படாமல் முகங் கொடுத்து அதில் ***அபார வெற்றியைப் பெற்றுக் கொள்வீர்கள். இன்றைய ஜெயத்தின் நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! நான் முகங் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், கஷ்டங்கள், உபத்திரவங்களின் போது என் உள்ளம் சஞ்சலப்படாதபடி என்னை தைரியப்படுத்துங்கள். தேவனே என் உள்ளத்தை ஆராய்ந்தறியும் உங்களுக்கே என்னை அர்ப்பணிக்கின்றேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்." (சங்கீதம் 146:5)

ஜீவ மன்னா

ஜனவரி 06 செவ்வாய்

# நீதிமான்களோடு உடன்படிக்கையை ஏற்படுத்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

வெளி. 22
ஆதியா: 01

**“ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும், உன்னோடேகூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள்.”** (ஆதியாகமம் 6:18)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் **இன்றைய புதிய நாளில் புதிய நன்மைகளின் ஆசீர்வாதங்கள் உங்களை வந்தடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** ஜீவிக்கின்ற தேவன் நீதிமானாயிருக்கிறார் பாவிகளாக உலகில் வாழ்ந்த எங்களை அவரது மைந்தனான இயேசுகிறிஸ்துவின் சரீரத்தில் இருந்து பெருக்கெடுத்த இரத்தத்தில் கழுவி பரிசுத்தமாக்கி எங்களை நீதிமானாக மாற்றியது நாமும் அவர் போலாகும்படியாகவே அவரைப் போல **நாமும் நீதிமான்களாக வாழ வேண்டுமென்பதே அவரது பிரியமாயிருக்கிறது.**

தேவ பிள்ளைகளே! இப்பூமியில் எல்லா மனிதர்களும் பாவம் செய்வதற்கும் தீமையான வழிகளில் நடப்பதற்கும் தொடங்கிய வேளையில் **தேவன் இவ்வுலகில் மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்.** தேவன் நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல் மனுஷன் முதற் கொண்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் **பண்ணுவேன். நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்.** நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். தேவன் நோவாவை நோக்கி “மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது. அவர்களாலே பூமி கொடுமையினாலே நிறைந்தது. நான் அவர்களை பூமியோடுங்கூட அழித்துப் போடுவேன். நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு அந்த பேழையிலே அறைகளை உண்டு பண்ணி அதை உள்ளும் புறம்புமாகக் கீழ் பூசு என்றார்.

தேவ பிள்ளைகளே! அதன் பிறகு **ஆதியாகமம் 6:18**இல் ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். நீயும் உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும் உன் குமாரரின் மனைவிகளும் **பேழைக்குள் பிரவேசியுங்கள்.** என தேவன் கூறியுள்ளார். **நீங்கள் கலங்காதிருங்கள்!** நீங்கள் நோவாவைப் போன்று நீதிமானாக வாழ்வீர்களெனின், தேவனோடு நீங்கள் சஞ்சரிப்பீர்களாயின் உங்களோடு தேவன் செய்துக் கொண்ட உடன்படிக்கை தொடர்ந்திருக்கும். நீதிமான்களோடு தேவன் செய்து கொள்ளும் உடன்படிக்கை என்றும் **கைவிடாதபடியிருக்கும்.** ஆகையால் **யாக்கோபு 5:16**இல் நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் **ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்று எழுதப்பட்டுள்ளது. இன்று வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் நீதிமான்களோடு உடன்படிக்கையை ஏற்படுத்துகின்றீர். நோவாவைப் போல நீதிமானாய் ஜீவித்து உங்கள் உடன்படிக்கைக்குள் பிரவேசித்து ஆசீர்வாதம் பெற உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.” (எரேமியா 31:31)

ஜீவ மன்னா

ஜனவரி 07 புதன்

## உங்களைச் சிறுமைப்படுத்த இடங்கொடாத சேனைகளின் கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 02 - 03

**"நீங்கள் என் ஜனத்தை நொறுக்கிச் சிறுமையானவர்களின் முகத்தை நெரிக்கிறது என்னவென்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்."** (ஏசாயா 3:15)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய புதிதான நாளில் புதிதான கிருபையிலே மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.*** உலகில் பிரச்சினை, உபத்திரவங்கள், துன்பங்கள், காரணமாக ஆதரவற்ற நிலையில் இருக்கும் எங்களைத் தனது சொந்த பிள்ளைகளாக உலகில் வேறுபடுத்தி, எங்களை ஆதரவற்ற நிலையினின்று மீட்டு ஆசீர்வதித்த தேவன் இன்றும் எங்களோடு இருக்கின்றார். ஆகையால் ***நீங்கள் கலங்காதிருங்கள்!***

தேவ பிள்ளைகளே! தேவன் எம்மை உலகில் தேர்ந்தெடுத்து "***தேவனின் கட்டளைகளை நாம் கைக்கொண்டால் அவர் சத்தத்திற்கு நாம் செவிகொடுப்போமாயின் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் நம்மை மேன்மையாக வைப்பார் என்றும், கர்த்தர் நம்மை வாலாக்காமல் தலையாக்குவார்***" என்றும் **உபாகமம் 28ம்** அதிகாரத்தில் கூறியிருக்கிறார். அதே போன்று மேலே குறிப்பிட்ட வசனத்திலும் ***நீங்கள் என் ஜனத்தை நொறுக்கிச் சிறுமையானவர்களின் முகத்தை நெரிக்கிறது என்னவென்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.*** தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவனுக்கு சொந்தமான உடமை என்பதால் உங்களை புறம்பே தள்ளிவிட தேவன் இடமளிக்கமாட்டார். எவருக்குமே உங்களை சிறுமைப்படுத்த அல்லது உபத்திரவப்படுத்த, தேவன் இடமளிக்கடாட்டார். ஆகையால் ***நீங்கள் தைரியமாயிருங்கள்!***

தேவ பிள்ளைகளே! ஆகையால் இன்றைய நாளிலும் உங்களுக்கு ***பல விதமான பிரச்சினைகள், இன்னல்கள், உபத்திரவங்கள் ஏற்பட்டதா?*** உலக மனிதர்கள் தம்மை ஆத்மீக பிள்ளைகளென்று கூறிக் கொள்கின்ற, ஆனாலும் ஆத்மீகரல்லாத பிள்ளைகள், உங்களுக்கு விரோதமாக பலவிதமான செயல்களைச் செய்த போதும் ***நீங்கள் அவைகளை நினைத்து கலங்காதிருங்கள்!*** மண்ணுலகை சிருஷ்டித்து அத்தோடு மனிதனை சிருஷ்டித்த தேவன் மாம்சமான அனைவருக்கும் சிருஷ்டிப்பின் தேவனாவார். ஆகையால் அவர் சிருஷ்டித்த பிள்ளைகளுக்கூடாக ***உங்களுக்கு உபத்திரவங்கள் ஏற்பட்டால் அந்த உபத்திரவங்களில் மீள முடியாதிருப்பின் அவர்களது அனைத்து செயல்களையும் நிர்மூலப்படுத்தி விடுவார்.*** அவர்களது செயல்கள் ஒன்றும் வாய்க்காது போகும். மோசேக்கு விரோதமாக எழும்பினவர்களுக்கு விரோதமாக கர்த்தர் யுத்தம் செய்து தொடர்ந்தவர்களை ஆழங்களிலே போட்டு விட்டார். ***பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், அவர்கள் நடக்க வேண்டிய வழியை அவர்களுக்கு வெளிச்சமாக்க அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழி நடத்திய நமது கர்த்தர் கண்ணின் மணியாக காத்துக் கொள்வார். வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை உங்கள் கண்ணின் மணியாக பாதுகாத்துக் கொண்டீர்கள். நீங்கள் என்னை உங்கள் உடமையென உலகில் வேறுபடுத்திக் கொண்டீர்கள். உமக்கு நன்றி.என்னை யாராலும் சிறுமைப்படுத்த விடாதபடியால் ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத்தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 15:20)

ஜீவ மன்னா

ஜனவரி 08
வியாழன்

# தாழ்த்தப்பட்ட உங்களை மேன்மையாக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 04 – 05

**"பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவைச் சமமாக்கப்படும் என்றும்,"** (ஏசாயா 40:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் தெய்வீக சமாதானத்துடனும் மனமகிழ்ச்சியுடனும் வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** சர்வ வல்லமையுள்ள, மகா பராக்கிரமிக்க பரலோகத்தில் வாசம் பண்ணும் சிருஷ்டிப்பின் தேவ பிதாவானவரின் சொந்த பிள்ளையாக தேவனின் ஆசீர்வாதத்தைப் பெறுகின்ற **நீங்கள் மிகவும் அதிர்ஷ்டக்காரர்கள்!** ஏனென்றால் **"நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி"** என **நீதிமொழிகள் 14:34**இல் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் **ஏசாயா 40:4** பிரதான வசனத்தில் குறிப்பிடப்படுகிறதாவது, **"பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சகல மலையும், குன்றும் தாழ்த்தப்பட்டு கோணலானது செவ்வையாகி கரடு முரடானவை சமமாக்கப்படும்"** என்றாகும். இந்த வசனத்தின் மூலம் எமது வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்கும் போது **மனிதருடைய வாழ்வில் சிறுமைப்படுதலை அகற்றி அந்த வாழ்க்கையை உயர்த்துவதைக் குறித்து கூறுவதைக் காணலாம்.** விஷேடமாக உலகில் சாதாரணமாக உலகத்தவர்களாக வாழ்ந்த எம் ஒவ்வொருவரையும் பரலோக தேவ பிதாவிற் கூடாக பரலோக அபிப்பிராயத்தின்படி எங்களை **தேவனின் பிள்ளைகளாக்குவதற்கு உலகில் தேர்ந்தெடுத்து எங்களை ஆசீர்வாதம் பெற்ற ஜனங்களாக மாற்றியிருக்கிறார். 1கொரிந்தியர் 1:28**இல் தேவ வசனத்தில் எமக்குக் கூறுவது **"உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவகைளையும்; இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துக்கொண்டார்" என்றாகும்.**

தேவ பிள்ளைகளே! ஆகையால் உலகில் சிறுமையுற்றிருந்த எங்களை தேவன் ஆசீர்வதித்து எங்கள் வாழ்வை உயர்த்திருக்கிறார். நீங்களும், நானும் தேவனின் வசனங்களை கடைப்பிடித்து, கீழ்படிந்து ஜீவிக்கின்ற வேளை தேவனின் வசனத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும் எங்களை நோக்கி கடந்து வரும் உலகில் வாழும் எல்லா மனிதர்களையும் பார்க்கிலும் நமது வாழ்க்கை சகல ஆசீர்வாதங்களுடன் உயர்ந்திருக்கும். அப்படியே தேவனுக்குள் எமது வாழ்க்கை உயர்வடையும் வேளை எங்கள் வாழ்க்கையில் நான் உயர்ந்திருக்கின்றேன் என்ற **மேட்டிமையான என்ற எண்ணத்தை உள்ளத்தில் வைத்துக் கொண்டு வாழ்பவர்களின் வாழ்க்கை எங்கள் முன்னிலையில் தாழ்த்தப்பட்டுப் போய் விடும்.** ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள்! உங்களைத் தன்னிடத்தில் தனது சொந்த விருப்பத்தின் பேரில் அழைத்துக் கொண்ட தேவன் உங்களது வாழ்க்கையில் பள்ளமான இடத்தை உயர்த்தி மேன்மையாக்க இன்றும் **உங்களோடு ஜீவிக்கின்றவராக வாசம் பண்ணுகிறார். உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை அழைத்தது வாழ்க்கையை உயர்த்தும்படியாக என்பதை நான் அறிவேன். உங்களுக்குள், உங்கள் வசனங்களைக் கைக்கொண்டு வாழ்ந்து உங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்று வாழ்க்கை உயர்வடைய உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6)

ஜீவ மன்னா
ஜனவரி 09
வெள்ளி

# தேவன் உங்களைத் தன்னிடத்தில் சேர்த்துக் கொள்ள மனதாயிருக்கிறார் !

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 06 – 07

**"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று."** (பரி.மத்தேயு 23:37)

அருமையான தேவ பிள்ளைகளே! தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட **உங்கள் அனைவரையும் ஜீவனுள்ள வல்லமையான இயேசுவின் நாமத்தினால் இக்காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவன் சிருஷ்டித்த கர்த்தராவார். அவர் படைத்த மனிதனுக்கு மாத்திரமன்றி இந்த பூமியில் அவர் சிருஷ்டித்த உயிருள்ள அனைத்து சிருஷ்டிகளும் தான் **ஈன்ற குட்டிகளுக்கும், குஞ்சுகளுக்கும் அன்பு செய்ய கற்றுக் கொடுத்தமை மிகவும் ஆச்சரியமானதொன்றாகும்.** மேலே கூறப்பட்டுள்ள வசனத்தில் கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளில் மூடி வெளிப்படுத்துகின்றதைக் குறித்தாகும்.

தேவ பிள்ளைகளே! கோழியானது தனது குஞ்சுகளை எதிரிகளின் மூலம் தாக்கங்கள் நிகழப் போகையில் அபயக் குரலெழுப்பி, கூக்கிரலிட்டு தன் **இறக்கைகளை விரித்து குஞ்சுகளை உடனடியாக இறக்கைகளுக்கடியில் சேர்த்துக் கொண்டு இறக்கைகளால் மூடிக் கொள்ளும். இதை உங்களில் பெரும்பாலானோர் அறிந்து கொண்ட விடயமல்லவா?** ஆனாலும் எருசலேம் ஜனங்களை நோக்கிக் கூறியதாவது "எருசலமே எருசலேமே தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ **உன் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கே மனதில்லாமற் போயிற்று என்றாகும்.** தேவன் தன் பிள்ளைகள் மீது எவ்வளவாக அன்பு செலுத்துகின்றார். கோழி தனது குஞ்சுகள் அழிந்து போகாதபடி அதிலிருந்து மீட்டுக் கொள்வதற்காக தனது சிறகுகளில் மூடிக் கொள்வது போல எருசலேம் பிள்ளைகளை அழிவின்றி மீட்டுக் கொள்வதற்கு தேவன் தன்னிடத்தில் சேர்த்துக் கொள்ள அழைத்தார் என்பதே பொருளாகும். ஆனாலும் தேவனின் சத்தத்திற்கு அவர்கள் செவிக்கமடுக்கவில்லை. அவரைச் சமீபித்து கிட்டிச் சேர விரும்பாதிருந்தார்கள்.

தேவ பிள்ளைகளே! கோழியின் சத்தத்திற்கு கீழ்படிகின்ற குஞ்சுகளின் வாழ்க்கை சத்துருக்களிடமிருந்து காப்பாற்றப்படுகிறது. அப்படியே **இயேசுகிறிஸ்துவின் அழைப்பிற்கு கீழ்படிகின்ற பிள்ளைகளின் வாழ்க்கை அழிவிலிருந்து காப்பாற்றப்படுகிறது.** உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! அன்று எருசலேமின் ஜனங்களை அழைத்த இயேசுகிறிஸ்து இன்று உங்களை தன்னிடத்திற்கு அழைக்கின்றார். நீங்கள் விருப்பத்தோடு இயேசுவண்டை இன்று கிட்டிச் சேர்ந்திருப்பீர்களாயின் உங்கள் வாழ்க்கை என்றும் பாதுகாப்பாக இருக்கும். இன்று உங்கள் வாழ்வில் பிரச்சினை நீங்கி ஒரு புதிய ஆரம்பம் உருவாகட்டும். **நீங்கள் விருப்பத்தோடு வாழ்வில் வெற்றி பெறுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் குமாரனான இயேசுகிறிஸ்துவிற்கூடாக உங்களோடு கிட்டிச் சேர்த்துக் கொண்டு என்னை பாதுகாப்பதால் ஸ்தோத்திரம். உங்கள் சத்தத்திற்கு செவி கொடுத்து உங்களைச் கிட்டிச் சேர்ந்திருக்க கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்." (1 தெசலோனிக்கியர் 5:24 )

ஜீவ மன்னா

ஜனவரி **10**
சனி

## தாகமுள்ளவன் மேல் அவருடைய ஆவியை ஊற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 08 – 09

"தாகமுள்ளவன்மேல்தண்ணீரையும்,வறண்டநிலத்தின்மேல் ஆறுகளையும்ஊற்றுவேன்;உன்சந்ததியின்மேல்என்ஆவியையும்,உன் சந்தானத்தின்மேல்என்ஆசீர்வாதத்தையும்ஊற்றுவேன்." (ஏசாயா 44:3)

அன்பான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் சிந்தனை உங்களை ஆட்கொள்ளும் படியாக அவரின் வல்லமையான நாமத்தினால் வாழ்த்துகின்றேன்.** எம்மை உருவாக்கிய ஜீவனுள்ள தேவனின் சொந்த பிள்ளைகளாகுவதற்கு உரிமை பெற்ற நீங்கள் யாவரும் **மிக அதிஷ்டக்காரர்கள்!** ஆவீர்கள். அப்படியான வரப்பிரசாதம் எங்களுக்கு உரிமையானது இரத்தம், மாமிசம் என்பவைகளின் விருப்பத்தின் பேரில் அல்லது மனிதர்களின் பிரியப்படியும் அல்ல தேவனின் பிரியத்தின்படியே ஆகும்.

தேவ பிள்ளைகளே! **"அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று"** தேவ வசனத்தில் **ரோமர் 8:28**இல் காண்கிறோம். ஆகையால் நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள்! நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பதனால் உங்களை யாரும் மேற் கொள்ளவோ, **தேவன் உங்களைக் குறித்து வைத்துள்ள எல்லா திட்டங்களிலும் ஒன்றாவது உங்கள் வாழ்வில் நிறைவேறாத வண்ணம் தடுக்கவோ யாராலும் முடியாது.** இன்றைய நாளில் மேற்குறிப்பிட்டுள்ள பிரதான தேவ வசனத்தில் **"தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்.........."** என்று தேவன் கூறியுள்ளார். ஆகையால் நீங்கள் உங்கள் வாழ்க்கையைக் குறித்து உங்கள் பிள்ளைகளின் வாழ்வைக் குறித்து உலகக் காரியங்களைக் குறித்து **உங்கள் உள்ளத்தை ஈடுபடுத்தி அவைகளையொட்டி அதன் பின்னே தொடர்ந்து செல்வதால் நீங்கள் களைப்பற்று போவீர்கள்.** அந்நிலையினின்று நீங்கள் தப்பித்துக் கொள்ள தேவனைத் தேடுங்கள். ஆனாலும் உங்கள் ஆத்துமாவைக் குறித்து மிகவும் ஆவலுடன் உங்களுக்குள் தன் சொந்த தேவ ஆவியை வைத்த **தேவன் பேரில் நீங்கள் அதிக தாகமாயிருங்கள்.**

தேவ பிள்ளைகளே! உங்களது விருப்பமில்லாது உங்களுக்குள் தேவனது ஆவியை ஊற்ற மாட்டார். நீங்கள் சொந்த விருப்பத்தில் தேவனது ஆவியானவருக்கு தாகமாயிருப்பீர்களெனின் தேவன் **அவரது ஆவியை மட்டுமன்றி அவரது ஆசீர்வாதத்தையும் உங்களுக்கு கொடுப்பார். தேவன் ஒரு போதும் பொய்யுரையாதவர் என்பதால் ஏசாயா 44:3**இல் எமக்கு பொருத்தனை செய்தது போல உங்களுக்கு மாத்திரமின்றி **"உங்கள் வம்சத்தின் மேலும் தேவனின் ஆவியையும், ஆசீர்வாதத்தையும் ஊற்றுவாராக"** அப்படியாக தேவனின் தேவ ஆவியை உங்கள் மேல் ஊற்றும் போது **உங்கள் வாழ்க்கையிலுள்ள எல்லா நுகங்களும், கட்டுகளும் இடிந்து விழுந்து விடும். வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! தாகமாயிருக்கிறவர்கள் மேல் தண்ணீரை ஊற்றுவது போல உங்கள் தேவ ஆவியானவர் மேல் தாகமுள்ளோர்க்கு உங்கள் தேவ ஆவியை ஊற்றுகிறபடியால் ஸ்தோத்தரிக்கிறேன். இன்றும் உங்கள் ஆவியை என் மேல் ஊற்றுவீர்களாக, இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார்."
(யோவேல் 2:23)

ஜீவ மன்னா
ஜனவரி 11
ஞாயிறு

## உங்கள் உள்ளார்ந்த சிந்தைனைகளை அறிந்த தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம் அதி: 10 – 11

**"அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: நீ எழுந்து, நடுவே நில் என்றார். அவன் எழுந்து நின்றான்." (பரி.லூக்கா 6:8)**

இயேசுகிறிஸ்துவின் இணையற்ற அன்பினால் இணைக்கப்பட்ட அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் இன்றைய நாளில் மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழ்கின்ற எல்லா ஜனங்களின் மத்தியிலும் அனேகர் எப்பொழுதும் **ஏதாவதொன்றைப் பேச முற்படுவார்கள். ஆனாலும் சிலர் எப்பொழுதும் பேசாத மிக அமைதியாகவே இருப்பார்கள்.** எப்படியாகிலும் மனிதர்களின் வாய் வார்த்தைகள் அல்ல: அவர்களின் உள்ளத்தின் நினைவுகளை அறிகின்ற தேவனொருவரும் இருக்கின்றார் என்பதால் நாங்கள் **அதிர்ஷ்டக்காரர்களாவோம்!**

தேவ பிள்ளைகளே! எங்கள் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவானவர் எங்கள் வாயின் வார்த்தைகளைக் கேட்கிறவர் மாத்திரமின்றி எங்கள் உள்ளத்தின் சிந்தைனைகளையும் அறிகின்ற தேவனாவார். **இன்றைய நாளில் நீங்கள் சந்தோஷமாக இருக்கின்றீர்களா? இல்லாவிடில் மனதுக்கத்தோடு, வேதனைகளோடும் இருக்கின்றீர்களா? என்று தேவன் நன்றாகவே அறிவார். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! அப்படியே ஐயோ எனக்கு மன ஆறுதலுக்காக ஒரு வசனமாயினும் கூற யாருமில்லையே என துக்கத்தோடு அங்கலாய்க்கின்றீர்களா?** அப்படியாயின் **இன்றிலிருந்து வேதனைப்படாதீர்கள்** மனிதர்களைப் பார்க்கிலும் உங்களைச் சமீபிக்கும், உங்களை ஆறுதல்படுத்தும் இரட்சகர் இயேசுகிறிஸ்துவிடம் உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து அவரிடம் சமீபமாகி விடுங்கள். கிட்டிச் சேருங்கள். ஏனென்றால் சில வேளைகளில் நாங்கள் **முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், இன்னல்கள், உபத்திரவங்கள்** என்பவைகளை இன்னுமொருவருக்கு கூற முடியாதவைகளாக இருக்கலாம். ஆனாலும் அப்படியான சந்தர்ப்பங்களானாலும் எங்கள் உள்ளத்தின் நினைவுகளை காண்கின்ற **இயேசுகிறிஸ்து எமக்கு உதவி செய்யும்படியாக விரைவாக கிரியை செய்வார்.**

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்துக் கொண்டிருந்தார். அங்கே சூம்பின வலது கையையுடைய ஒரு மனுஷன் இருந்தார். அப்பொழுது வேதபாரகரும், பரிசேயரும் அவரிடத்தில் குற்றம் பிடிக்கும்படி ஓய்வு நாளில் சொஸ்தமாக்குவரோ? என்று அவர் மேல் நோக்கமாயிருந்தார்கள். அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து சூம்பின **கையையுடைய மனுஷனை நோக்கி நீ எழுந்து நடுவே நில் என்றார். அவன் எழுந்து நின்றான்.** அதன் பிறகு உன் கையை நீட்டு என்று கூறினார். அவன் தன் கையை நீட்டினான். உடனே **அவன் கை மறுகையைப் போலச் சொஸ்தமாயிற்று.** மனிதர்கள் தேவனுக்கு விரோதமாக இருப்பதை அவர்களின் சிந்தனைகளின் மூலமாக தெரிந்துக் கொண்ட இயேசுகிறிஸ்து அவர்களைப் பொருட்படுத்தாது **சூம்பின கை உடைய மனுஷனை சுகப்படுத்துவாராயின் அவர் உங்கள் சிந்தனைகளை அறிந்து துணை செய்வாவராக! வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! இரட்சகர் இயேசுகிறிஸ்து என்னைக் கிட்டிச் சேர்த்துக் கொண்டமையால் ஸ்தோத்திரம். தேவன் தூரத்திலே இருந்து எங்கள் சிந்தனைகளை அறிந்து எமக்கு உதவி செய்கின்ற தேவனாகையால் ஸ்தோத்தரிக்கின்றேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சாதித்தறிகிறவருமாயிருக்கிறேன்." (எரேமியா 17:10)

ஜீவ மன்னா

ஜனவரி 12
திங்கள்

# உங்கள் கண்களை கண்ணீருக்குத் தப்பவைக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 12 – 13

**“ என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.”** (சங்கீதம் 116:8)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் மகிழ்ச்சிகரமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** நீங்கள் ஆத்மீக பிள்ளையாக இருப்பினும் கண்ணீரின் பள்ளத்தாக்கில் நடந்து செல்பவராக இருப்பினும் இன்றைய நாளில் இந்த **தேவ செய்திக்கூடாக தேவன் உங்களை ஆறுதல்படுத்துவார்.** ஏனென்றால் மேலே குறிப்பிட்ட தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது தேவன் **எங்கள் கண்ணைக் கண்ணீருக்கு தப்புவித்தார் என்றாகும். ஆகையால் உள்ளம் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! ஆவிக்குரிய தேவ பிள்ளைகளாகிய **எங்களுக்கு உலகில் பிரச்சினை, உபத்திரவம் பல சவால்களுக்கு முகங் கொடுக்கும் பொழுது எமது உள்ளம் சோர்ந்து போகின்ற வேளைகள் அநேகமாக ஏற்படலாம்.** எத்தனையோ வாரங்கள், எத்தனையோ மாதங்கள் எங்களுக்கு அப்படியாக வாழ வேண்டிய நிலை வரலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தேவனின் அன்பு அரவணைப்பு எங்களால் அறிந்துக் கொள்ள முடியாது. **நாங்கள் தனியாக இருக்கின்றோம். என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தை வாட்டிக் கொண்டேயிருக்கும்.** ஆனாலும் நாங்கள் குழப்பமடையாது, பயத்திற்குள்ளாகதபடி இருக்கும்படி தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் தேவன் எங்களை கண்ணீரிலிருந்து மீட்டுக் கொள்வார். சில வேளைகளில் தேவன் **“ஒரு இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன், ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன்.” என ஏசாயா 54:7**இல் சொல்லியிருப்பது போல எங்களை ஒரு இமைப்பொழுது கைவிடினும் எம்மை நித்தியமாக சேர்த்துக் கொள்வார். அந்த இமைப்பொழுது நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம் போல எங்கள் உள்ளத்திற்கு தென்படுவது உண்மையாகும். ஆனாலும் **இடைவிடாது தேவனை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தீர்களானால் தேவன் மீண்டுமாக என்னை ஆறுதல்படுத்த கிரியை செய்வார்.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவ பிதாவானவரைக் குறித்து அறிந்துக் கொண்டமையால் **நீங்கள் நித்திய காலமும் வேதனைப்பட்டு கண்ணீரான வாழ்க்கை வாழ்வதில்லை என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள்.** ஏனென்றால் நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக் கொள் என்று கர்த்தர் சொல்கிறார். ஆகையால் உங்கள் வாழ்வில் காணப்படும் எல்லாக் குறைகள், பிழைகளை அகற்றி **நீங்கள் இடைவிடாது தேவனைத் தேடுங்கள்.** உங்களால் விட்டு விலக முடியாத இரகசிய பாவமெனினும் தேவனுக்கு முன்னால் அவைகளை மறைக்காமல் அறிக்கையிட்டு மீட்கப்படுவதற்கு இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது **உங்கள் கண்களை கண்ணீருக்குத் தப்புவிப்பார். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

ஏன் தேவனே! நீங்கள் எங்கள் கண்களை கண்ணீரில் தப்புவிக்கிற தேவனாகையால் ஸ்தோத்திரம். நீங்கள் என்னை அநேக காலமாக என்னைக் கைவிட்டது என்னுடையபிழைகள் காரணமாக என்பதை நானறிவேன்.பிழையை விடுத்து என் வேதனை வாழ்வில் மீட்கப்பட நீங்கள் உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் . ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார்.” (ஏசாயா 25:8)

ஜீவ மன்னா
ஜனவரி 13
செவ்வாய்

## உபத்திரவங்களில் பிரமாணங்களைக் கற்றுக் கொடுக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 14 – 15

**"நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்."** (சங்கீதம் 119:71)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இப்புதிய நாள் மகிழ்ச்சிகரமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள், ஆபத்துக்கள் என்பவற்றிற்கு முகங் கொடுப்பார்கள். ஆகையால் அவர்கள் எப்போதும் அவைகளைக் குறித்து **சிந்தித்து கவலைப்பட்டு உள்ளம் குழம்பிய நிலையில் வாழ்க்கையில் தோல்வியுற்று இருக்கக் கூடும். ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள்!** ஏனெனில் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்குக் கூறுவது **ஏசாயா 43:18,19**இல் கூறுவது "**முந்தினவைகளைச் சிந்திக்க வேண்டாம். இதோ புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும்**" என்றாகும்.

தேவ பிள்ளைகளே! இயேசுவின் மிக பிரதானமான "**சீஷனான பரி.பவுல் அடியார் எங்களுக்குக் கூறுவது, பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகின்றேன்**" என்றாகும். நீங்களும் அவ்வண்ணமே செய்யுங்கள். நீங்களும் இன்றிலிருந்து உங்கள் வாழ்க்கையில் அடைந்த வீழ்ச்சி, ஆகியவைகளை மீண்டும் சிந்திக்காதீர்கள். எல்லாவற்றையும் மறந்து புதிய வாழ்வை ஆரம்பியுங்கள். உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுங்கள். பிதாவே நீங்கள் என்னுடைய வாழ்க்கையை பொறுப்பெடுத்து உங்கள் குமாரனான இயேசுவுக்கூடாக **நீங்கள் எனக்கு புது வாழ்வை பெற்றுத் தாருங்கள் என தேவ சமுகத்திலிருந்து ஜெபம் பண்ணுங்கள்.**

தேவ பிள்ளைகளே! **மேற்கூறிய சங்கீதம் 119:71** இல் எழுதியிருப்பதாவது "**நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதனால் உமது பிரமாணங்களைக் காத்துக் கொள்ளுகிறேன்.**" என்றாகும். அதன் கருத்தானது தேவனுடைய கட்டளைகளைக் கற்றுக் கொள்ளும்படியாக எனக்கு உபத்திரவம் ஏற்பட்டது என்றாகும். ஆகையால் ஆபத்து காலத்தில் தேவன் பேரில் எமது உள்ளம் மனந்திரும்பி தேவ வசனத்திற்கு செவிசாய்த்தல் அவசியம். **தேவன் மனிதர்களுக்கு மனவிருப்பத்தோடு உபத்திரவங்களை அனுமதிப்பதில்லை. அவர்களை துக்கத்திற்குட்படுத்தமாட்டார் என வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.** எங்களுக்கு ஆபத்து ஏற்படுவது நாங்கள் தேவ வசனத்திற்கு கீழ்படியாத வேளையில் ஆகும். ஆகையால் உங்கள் ஆபத்தின் போது உங்கள் ஆத்துமா பின்வாங்கி போகாதபடி **நீங்கள் தேவ வசனத்திற்கு கீழ்படியுங்கள். வெற்றிச் சிறந்த நன்நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! ஆபத்து ஏற்படுவது உங்கள் வசனத்திற்கு செவிசாய்க்காது இருக்கின்ற வேளையில் ஆகும். உங்களுக்குக் கீழ்படிந்து ஆபத்துக்களின் மீளுவதற்கு எனக்கு கிருபை செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள்; இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன், என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்." (நீதிமொழிகள் 1:23)

ஜீவ மன்னா
ஜனவரி 14
புதன்

## உங்களை மார்பில் அரவணைத்துக்கொள்ளும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 16 – 17

**"மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்: ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்."** (ஏசாயா 40:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ளவரும் நித்திய பிதாவானவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக என இக்காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** நீங்கள் ஜீவிக்கின்ற தேவ பிதாவானவரைக் குறித்து அறிந்து தேவனின் சொந்த பிள்ளையாகிய இன்றும் இந்த ஜீவ மன்னா தேவ செய்திக் கூடாக உங்கள் ஆத்துமாவைப் பெலப்படுத்திக் கொள்வதனால் உங்களைப் போன்று பிறிதொரு அதிர்ஷ்டசாலி உலகில் இல்லை எனலாம். ஆகையால் ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்கூடாக பரலோக தேவ பிதாவானவரைக் குறித்து அறிந்துக் கொண்ட நீங்கள் தேவனது சொந்த பிள்ளையைப் போன்றே தேவனின் ஆட்டுக்குட்டியும் என்று ***ஏசாயா 40:11***இல். ***"மேய்ப்பனைப் போல் தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளை தமது புயத்தினால் சேர்த்து தனது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" என்று அங்கே கூறப்பட்டுள்ளது.*** சில வேளைகளில் தேவனை அறிந்து பலவருடங்கள் கடந்து சென்றிருக்கலாம். நீங்கள் ஆத்மீக வாழ்க்கையில் அதிகமான அனுபவங்களை பெற்று ஆவிக்குரிய வாழ்வில் பெலன் நிறைந்து இருக்கலாம். ஆகையால் நான் இப்போது ***தேவனின் ஆட்டுக்குட்டியல்ல என நினைக்கக்கூடும்.*** ஆனாலும் உங்கள் பரலோகப் பிதா சம்பூரணமாக இருப்பது போன்று நீங்கள் இன்னும் நிறைவடையாதபடியால் நீங்கள் இன்னும் ஆட்டுக்குட்டியாக இருக்கின்றீர்கள்.

தேவ பிள்ளைகளே! பல வேளைகளில் தமது சிறிய பிள்ளைகளை கைகளில் இறுக அரவணைத்து தூக்கிக் கொண்டு செல்வது தாய்மார்களாகும். ஆனாலும் எங்கள் தேவபிதா அம்மாவைப் போன்று எங்களை மார்பில் அரவணைத்து கரங்களில் ஏந்திக் கொண்டு செல்வாராக. தேவன் அப்பாவைப் போன்றும் அம்மாவைப் போன்றும் ***எங்களை போஷித்து பாதுகாத்துக் கொள்கின்ற தேவ பிதாவாக இருக்கின்றார்.*** தேவன் உங்களுக்கு அன்பு செய்து உங்களைத் தனது மார்பிலே சாய்த்து முன்னோக்கிச் கொண்டு செல்வார். அப்படியே உங்கள் வாழ்வில் முகங் கொடுக்கிற சவால்கள் காரணமாக நீங்கள் சோர்ந்து இருக்கும் போது தேவன் உங்களை அன்போடு ஆறுதல்படுத்தி மீண்டுமாக ***உங்கள் முதிர்வயது வரை சுமந்து, பொறுமையோடு செல்கின்ற தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார்.*** தேவனை விசுவாசித்து அவரின் வசனத்தின்படி நடந்து வாழ்வில் ***வெற்றி பெறுங்கள். வெற்றிகரமான நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் அம்மாவைப், அப்பாவைப் போன்று எனக்கு அன்பு செய்து என்னை பாதுகாத்து என்னை முன்னோக்கிக் கொண்டு செல்வதால் உங்களுக்கு நன்றி! இன்றும் என்னை நெஞ்சோடு அரவணைத்து கொண்டுச் செல்லுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்." (ஏசாயா 66:13)

ஜீவ மன்னா

ஜனவரி 15
வியாழன்

# பயப்படாதீர்கள் கர்த்தர் உங்கள் பட்சத்தில் இருக்கிறார் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 18 - 19

**"கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்?" (சங்கீதம் 118:6)**

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! மகிமையுள்ள மாறாத தேவன் **இயேசுகிறிஸ்துவின் ஜீவனுள்ள நாமத்தினால் இன்றைய தினத்தில் அதிவிஷேசித்த ஜெயத்தை பெறும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** எங்களை நேசிக்கிறவர்கள் அனேகர் இருக்கிறார்கள். அந்த நேசம் நிலைநிற்பது எவ்வளவு காலத்திற்கு எவ்வளவு நேரத்திற்கு என்பது எமக்குத் தெரியாது. ஏனெனில் மனிதன் வேறுபட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் அவனது நேசம் மாறிப் போய் விடும். வேதவாக்கியம் இப்படி கூறுகிறது **நாசியில் சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள் எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம் என்பதாக.**

தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! உங்களால் மனிதர்களை விசுவாசிக்க கூடாதிருந்தாலும் எந்நேரமும் உங்கள் பட்சத்தில் நிற்கும் தேவனொருவர் இருக்கிறார். **அவர், பிதாவானவராக, குமாரன் பரிசுத்த ஆவியானவராக மூன்று வகையில் உங்களோடிருக்கிறார்.** எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்து எமக்கு கூறுகிறார். **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று.** ஆவியானவரைக் குறித்தும் அவரது வார்த்தைகள் இவ்வண்ணம் எமக்கு கூறுகிறது தேவனை ஏற்றுக் கொள்ள உலகத்திலுள்ளோர்க்கு முடியாது. ஏனென்றால் உலகத்தவன் தேவனைக் கண்டதும் அறிந்து கொண்டதுமில்லை. ஏனென்றால் தேவன் உங்களோடு தங்கியிருக்கிறார். உங்களுக்குள் இருக்கின்றார் என்றாகும்.

தேவ பிள்ளைகளே! **திருத்துவத்தின் தேவன் உங்களோடிருப்பதால் நீங்கள் பயப்படாதிருங்கள். சங்கீதம் 118:6** கூறப்பட்டிருக்கிறது போல் **தேவன் உங்கள் பட்சத்தில் இருப்பதால் மனிதர்களால் உங்களுக்கு எந்த தீங்கும் நேரிடாது என்பதை நினைவில் வைத்திருங்கள்.** அவர் தராதரத்தைப் பாராதவர். சகலருக்கும் ஒரே விதமாக அன்பு கூறுகிறவர் நீங்கள் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து ஏழையாய் மாறிப்போய் இருந்தாலும். நோயினால் பாதிக்கப்பட்டு பெலவீனனாய் இருந்தாலும், உங்கள் உற்றார், உறவினர்கள், உங்களை ஒதுக்கிய போதும் உங்கள் வாழ்க்கையின் அத்திவாரமே சரிந்து போய் இருந்தாலும், தேவன் உங்கள் பட்சத்திலிருந்து மறுபடியும் **உங்கள் வாழ்க்கையை சீர்ப்படுத்தி உயர்வடையச் செய்வார்.** நோயின் படுக்கையை மாற்றிப் போடுவார். மரணத்தின் விளிம்பிலிருந்து தூக்கியெடுப்பார். ஆகையால் மனிதர்கள் அல்ல தேவன் எப்போதும் உங்கள் பட்சத்தில் இருக்கிறபடியால் அவருக்கு பிரியமாக நடந்துக் கொள்ளுங்கள். **அப்போது வாழ்வில் ஜெயம் பெறுவது நிச்சயம். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

அன்பு நிறைந்த தேவனே! என்னில் வாசம் பண்ணும் திருவத்தின் தேவனானபடியால் உங்களை ஸ்தோத்தரிக்கிறேன். உங்களை பிரியப்படுத்தம்படியாக வாழ்ந்து உங்களை எனக்குச் சமீபமாக நிற்கச் செய்தக்கதாக என் ஆத்மீக வாழ்வை சீர்ப்படுத்தம்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது." (சங்கீதம் 103:19)

ஜீவ மன்னா

ஜனவரி **16**

வெள்ளி

# மரணத்துக்கு நீங்கலாக்கி ஆத்துமாவை இரட்சிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 20 – 21

**“என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.”** (சங்கீதம் 116:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் **இன்றைய நாளில் இவ் உதய வேளையில் நீங்கள் தீர்க்காயுசு (நீண்ட ஆயுள் காலம்) பெற்று வாழ்ந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன்.** மனிதனை மரணத்தில் இருந்து விடுவிக்கிறவரும் மரணித்தவனை மறுபடியும் உயிரடையச் செய்கிறவருமான **தேவனொருவர் இவ் உலகில் இருக்கிறார் என்பது பெரும் ஆச்சரியம் அல்லவா?** மெய்யான தெய்வம் என்றொருவர் இருக்கிறார் என்பதை நாம் யாவரும் அறிவோம். அவரே எம் தேவனானவர் ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

பிரியமானவர்களே! என் **இருபத்தேழாவது (27) வயதினிலே “கேஸ்டிக்” எனப்படும் நோயினால் மிக பயங்கரமாகப் பாதிக்கப்பட்டு மிக வேதனைக்குள்ளானேன்.** அநேக வைத்திய பரிகாரங்கள் செய்துக் கொண்ட போதிலும் எந்தவிதமான சுகமும் கிடைக்கவில்லை. எனக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்ட பின்னும், **எந்தவித பலனும் கிடைக்கவில்லை.** எனது வாழ்வைக் குறித்ததான எதிர்ப்பார்ப்புகள் யாவும் இடிந்து விழுந்தது. **இருபத்தேழு வயதினிலேயே நான் மரணத்தை எதிர் நோக்கும் நோயாளியாக மாறிவிட்டேன்.** இந்த இளம் வயதினிலே அகாலமரணமடைய போகிறேனே என என் இதயம் பயங் கொண்டது. ஏன் உள்ளம் வேதனையில் கலங்கிப் போனது. இப்படியான வேளையில் என் நண்பர் ஒருவர் மூலமாக ஆத்மீக தேவ சபை ஒன்றிற்கு செல்ல வாய்ப்பு கிடைத்தது. அங்கே ஆண்டவராகிய **இயேசுகிறிஸ்துவின் அருளை, கிருபையை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.** அதன் பிறகு பதினொரு வருடம் வேதனைகள் மத்தியில் வாழ்ந்த நான் இந்த **“கேஸ்டிக்”** என்னும் நோயிலிருந்து சம்பூரண விடுதலையைப் பெற்றுக் கொண்டேன்.

தேவ பிள்ளைகளே! ஒரு மனிதன் மரணம் என்பது எந்நேரத்தில் அவனுக்கு வரும் என்பதை அறியான் விபத்து மூலமாக, பங்கரமான நோய்கள், பரவும் நோய்கள் **விஷ ஜந்துக்கள் போன்ற அனேக காரியங்களுக்கூடாக திடீரென அகாலமரணங்கள் ஏற்படுகிறது.** மரணத்தின் வேளையையும் காரணத்தையும் மனிதனால் அறிய முடியாது தவிர்க்கவும் முடியாது. இதையே **பிரசங்கி 8:8 வெளிப்படுத்துகிறது.** ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை அந்தப் போருக்கு நீங்கிப் போவதுமில்லை துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது. ஆயினும் **பயப்படாதீர்கள் சங்கீதம் 116:8இல் எழுதப்பட்டுள்ள பிரகாரம் எம் ஆண்டவர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கண்ணைக் கண்ணீருக்கும் என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்** என்பதாக. ஆத்மீக பிள்ளைகளே நீங்கள் எப்போதும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்து அதன் மூலம் பெலன் கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்கேற்படும் சிறு உபத்திரவங்கள் நோய்களைக் குறித்து **சாத்தான் ஏற்படுத்தும் எவ்வித சத்தத்திற்கு இடம் கொடாதபடி பயமின்றி வாழ முடியும்.** இன்றும் உங்களை மரணக்கட்டுகளின் இருந்து விடுவிக்க வல்லவரும் உங்களை மரணத்திலிருந்து உயிர்ப்பிக்க வல்லவருமான தேவாதி தேவன் தாமே ஜீவனுள்ளவராய் உங்களோடிருக்கிறார். **ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! என் ஆத்துமாவை மரணப்பளளத்தாக்கிலிருந்து
விடுவித்தவரே! நான் உங்களை விசுவாசித்து உங்களையே நோக்கிப்
பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னை பாதுகாத்து முன் நோக்கி நடத்துமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்;
சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று
கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.” (எசேக்கியேல் 18:32)

ஜீவ மன்னா

ஜனவரி 17 சனி

# உங்கள் ஜெபங்களை கேட்டருளும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 22 – 23

**"நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக."** (சங்கீதம் 6:9)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இக் கிருபையின் நாளிலே ஜெயம் பெற்று வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஆத்துமாவிலே தேவனை அண்டி வாழும் தேவ பிள்ளைகளாகிய நாம் எமது பரலோக தகப்பனுடைய வாயிலிருந்து புறப்பட்டு வருகிற எல்லா வார்த்தைகளும் எமது ஆத்துமாவை திருப்தியடையச் செய்வதை உணர்கிறவர்களாவோம். இன்றைய தினத்திலும் இத் தேவ செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் உங்கள் வாழ்வில் காணப்படுகின்ற **ஒரு பிரச்சினை அல்லது துன்பத்திலிருந்து விடுதலையை எதிர்பார்க்கிறவராய் இருக்கலாம்.** மனிதர்களுடைய வாயின் வார்த்தைகளால் புண்பட்ட இருதயத்தோடு உள்ளம் உடைந்து போன நிலமையில் துன்பத்தோடு இருக்கலாம். **தேவ வார்த்தைகள் உங்களுக்கு ஆறுதல் அளிக்கும்.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** ஒரு நாளும் உங்களை கைவிடாதவரும் உங்களை சிறுமையாய் எண்ணாதவருமாகிய ஒரு ஆண்டவர் உயிருள்ளவராய் உங்களோடிருக்கிறார். அவர் உங்கள் வேண்டுதல்களையும், ஜெபங்களையும் கேட்கும் தேவனாவார். வேதத்திலே தாவீது ராஜா **சங்கீதம் 6:9**இல் இப்படி கூறுகிறார். **கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார். கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக் கொள்வார்.** இவ்வண்ணமாக செயல்படும் தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். அது மாத்திரமல்ல **சங்கீதம் 159:2**இல் இப்படியும் சொல்கிறார். என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர் என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். **என் நினைவுகளைத் தூரத்திலிருந்தே அறிகிறவராய் இருப்பதால் அவர் எங்ஙனம் எமது விண்ணப்பத்தையும், ஜெபத்தையும் கேளாதவராய் இருப்பார்.**

அன்பு பிள்ளைகளே! ஒரு மனிதனிடம் நீங்கள் ஒரு காரியத்தைச் சொல்லும் போது அதை காது கொடுத்து கவனமாய் கேட்பார். ஆனால் சில நாழிகைக்குள் அக்காரியத்தை மறந்து போய் விடக் கூடும். ஆனால் உங்கள் தேவ பிதாவானவர் அவரது சமுகத்திற்கு முன்பாய் ஏறெடுக்கும், **ஜெபங்கள் விண்ணப்பங்கள், யாவற்றையும் மிக அவதானமாகக் கேட்டு அவைகளுக்கு பதிலளிக்கிறவராக கிரியை செய்கிறார்.** உங்கள் ஜெபத்தை கேட்டவுடனே அவர் செயல்படுகிறவராவார். நீங்கள் குரலை உயர்த்தி ஜெபித்தாலும், இருதயத்தில் விண்ணப்பம் பண்ணினாலும். சிந்தைனையில் அவரிடம் உயர்த்தினாலும், கர்த்தர் அவை யாவற்றையும் ஏற்றுக் கொண்டு பதிலளிக்கிறார். **ஆகையால் நீங்கள் இடைவிடாமல், சோர்வடையாது, உற்சாகத்தோடு போராடி ஜெபித்து ஆத்மீக வாழ்விலே ஜெயமடையுங்கள். ஜெயத்தின நாள்!**

ஜெபம்

என் நேசத் தகப்பனே! என் ஜெபத்தை கேட்கிறவரே என் விண்ணப்பங்களுக்கு பதிலளிப்பவரே! உங்களுக்கு நன்றி இயேசுவே! இன்றும் என் ஜெப விண்ணப்பங்களுக்கு பதிலளித்து என் ஆத்துமாவை காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;" (பரி.மத்தேயு 7:7)

ஜீவ மன்னா

ஜனவரி 18 ஞாயிறு

# தெளிந்த புத்தியுள்ளவர்களாய் பிசாசனவனை எதிர்த்து நில்லுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 24 - 25

**"அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்."** (அப்போஸ்தலர் 19:15)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! கிருபையும், மகிமையும் அருளும் ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் அன்புக்குரிய **தேவ பிள்ளைகளே! இன்றைய இப் புதிய தினம் மிக மகிழ்ச்சிகுரியதாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன். அரூபியாக கிரியை நடப்பிக்கும் ஜீவிக்கின்ற தேவ பிதாவானவரின் சொந்தப் பிள்ளைகளாக விளங்கும் நீங்கள் யாவரும் அதிர்கஷ்டசாலிகளே**! ஏனெனில் தேவனை நீங்கள் காணாவிட்டாலும் தாயின் கர்ப்பத்தில் உண்டான நாள் முதலாய் உங்களைத் தெரிந்துக் கொண்டு சகல **ஜாதிகளுக்கு மத்தியில் விஷேசித்த பொக்கிஷமாக தன்னுடைய சுவீகாரப் புத்திரனாக மாற்றிக் கொண்டார்.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவ பிதாவைக் குறித்து சம்பூரணமாக அறியாதவராய் இருந்த போதும் அவர் உங்களை குறித்த சகல விடயங்களையும் நன்கு அறிந்தவராவார். அதே போல் உங்களை மிக உன்னிப்பாக நோக்கிப் பார்த்து உங்கள் வாழ்க்கை நடைமுறைகளை தேடிப் பார்க்கும் வேறு ஒரு நபரும் உண்டு. அது ஆத்மீக பிள்ளைகளுக்கு **விரோதியான பிசாசனவனே மேலே கொடுக்கப்பட்ட பிரதான வேத வாக்கியம் இதையே வெளிப்படுத்துகிறது.** பொல்லாத ஆவி அவர்களை நோக்கி இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன் நீங்கள் யார் என்று சொல்லிற்று. இப்படி பிசாசு கூறியது பிரதான **ஆசாரியனாகிய ஸ்கேவான் என்னும் யூதனுடைய குமாரர் ஏழு பேரிடமாகும்.** பவுலின் கைகளினாலே தேவன் விஷேசித்த அற்புதங்களைச் செய்தருளினார். இதைக் கண்ட இவர்கள் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை சொல்லி "**பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்கு கட்டளையிடுகிறோம்.**" என்று சொன்னதால் **பின் பொல்லாத ஆவியையுடைய அவர்கள் மேல் பாய்ந்து பலாத்காரம் பண்ணி அவர்களை மேற்கொள்ள அவர்கள் நிர்வாணிகளாகவும், காயப்பட்டவர்களாகவும் அந்த இடத்தை விட்டே ஓடிப் போனார்கள்.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக**! நீங்கள் பரி.பவுலைப் போல் ஆவியானவரால் நிரம்பியிருப்பீர்கள் ஆயின் உங்களுக்கு இச் சம்பவம் நடைபெறாது. நான் பரி.பவுலைப் போல் இயேசுவின் சீஷன் அல்லவே ஆகையால் இவைகள் எனக்கு அவசியமில்லை என்று எண்ணாதிருங்கள். ஏனெனில் உங்கள் ஆத்துமா ஜீவியத்திற்கு விரோதமாக சாத்தான் செயல்படும் போது **அவனுக்கு எதிர்த்து நின்று வெற்றி பெற உங்களுக்குள் தேவ வல்லமை அபிஷேகம் இருக்க வேண்டியது அவசியமே.** நீங்கள் பரிசுத்தமாய் ஜீவிக்க இந்த தேவ ஆவியானவரின் அபிஷேக வல்லமை இருப்பதை அறியும் பொல்லாங்கன் உங்களுக்கு முன்பாக பயந்து ஓடிப் போவான். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என்னை அதிகமாய் நேசிக்கும் அன்பு தேவனே! இயேசுகிறிஸ்துவின் மூலம்
தேவரீர் எனக்களித்த தேவ வல்லமை அபிஷேகத்திற்காய் ஸ்தோத்திரம்
உங்களுக்குள் பரிசுத்தமாய் வாழவும், என்னை எதிர் கொள்ளும் பொல்லாத
ஆவிகளுக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கவும் கிருபையருளுமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

**வேத வாக்குத்தத்தம்**

" தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்: ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்." (1 பேதுரு 5:8)

ஜீவ மன்னா

ஜனவரி **19**
திங்கள்

# தள்ளப்பட்டவர்களை தம்மண்டைக்கு அழைக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 26 – 27

**"அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து,......, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்."** (பரி.லூக்கா 7:37,38)

அன்புமிக்க எனதருமையான தேவபிள்ளைகளே! இப் புதிய ஆண்டில் முதல் மாதத்தில் ஆரம்பமாகிய சகல நாட்களிலும் தேவனுடைய ஆசீர்வாதம் எம்மை நிறைந்தபடியால் நன்றி கூறி ***இன்றைய நாளில் சகல மகிழ்ச்சியில் பூரணப்படும்படியாக வாழ்த்துகின்றேன்.*** எம் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் ***தூய இரத்தத்தால் சகல பாவங்களும் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டவர்களே நீங்கள் பாக்கியவான்கள்.*** ஏனெனில் இயேசுகிறிஸ்து சொல்கிறார். "நீதி மான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்றார். ஆனபடியால் அவரின் இரத்தத்தால் நீதிமான்களாக்கப்பட்ட நாம் பாக்கியவான்களே!

தேவ பிள்ளைகளே! உலகில் பலவீனமானவைகளையும் அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் தெரிந்துக் கொண்டார் என்றும் எழுதப்பட்டுள்ளது. இன்றைய தின பிரதான வசனத்திற்கூடாக **பரி.லூக்கா 7:37,38** ஒரு பாவியான ஸ்திரியை இயேசு தெரிந்துக் கொண்டதை வெளிப்டுத்துகிறது. அப்பொழுது அந்த ஊரில் பாவியாகிய ஒரு ஸ்திரி அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து ***அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு அவருடைய பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து தன் தலைமயிரினால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து பரிமள தைலத்தைப் பூசினாள்.*** அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்ட போது இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மை தொடுகிற ஸ்திரி இன்னாளென்றும் இப்படிப்பட்டவனென்றும் அறிந்திருப்பார். இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

ஆயினும் தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து சீமோனை நோக்கி சீமோனே உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும். ***அவர் யாவராலும் தள்ளப்பட்ட பாவியாகிய ஸ்திரியை மன்னித்து பரிசுத்தப்படுத்தி உயர்த்தினார்.*** அவளை நோக்கி உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!*** உங்கள் வாழ்வில் நீங்கள் அறிந்தோ அறியாமலே நடந்து போன தவறுகள் நிமித்தம் அதையே நினைத்து ***இயேசுகிறிஸ்துவை விட்டு தூரமாய் விலகி போகாதிருங்கள்.*** மனிதர்கள் உங்களை தள்ளிவிட்ட போதும் வெறுத்து ஒதுக்கிய போதும் இயேசு உங்களை அதிகமாய் நேசிக்கிறார். ***நீங்களும் அவர் மீது மிகவுமாய் அன்பு கூர்ந்து பாவ மன்னிப்பை கேட்பீர்களாயின் அவர் யாவற்றையும் மன்னித்து தம்மோடு சேர்த்துக் கொள்வார்.*** அவர் ஒரு போதும் உங்களை சிறுமைப்படுத்த மாட்டார். அவர் அன்பு நிறைந்த தேவன் ஆவார். ***இன்றைய நாள் மனமகிழ்வின் நாள்!***

**ஜெபம்**

மகா இரக்கமுள்ள என் பரலோக தகப்பனே! என் பிழைகளின் நிமித்தமாய் உங்கள் சமூகத்தை விட்டு தூரமாயிருக்கும் என்னை இயேசுவின் திரு இரத்தத்தால் பரிசுத்தப்படுத்தி உங்கள் அன்பிற்கு என்னை கிட்டிச் சேர்த்துக் கொள்ளுங்கள். என்னை மன்னித்து புது கிருபையை அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நான் காணாமற்போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்;..." (எசேக்கியேல் 34:16)

ஜீவ மன்னா

ஜனவரி 20 செவ்வாய்

# எங்களுக்காக மனுஷர்கள் மத்தியில் பரிந்து பேசும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 28 - 29

“இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா?...” (பரி.லூக்கா 6:3)

பிரியமான தேவ பிள்ளைகளே! யோசனையில் பெரியவரும் செயலில் வல்லவரும், நல்லவரும் தயையுள்ள வருமான **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் ஜெயத்தின் ஆசீர்வாதத்தால் மகிழ்ந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன்.** ஆண்டவர் இயேசுகிறிஸ்து உண்மையான உள்ளத்தோடு நேசித்து பின்பற்றுபவன் யாராயினும் அவன் உலகத்தை ஜெயம் கொண்டவனாவான் ஏனெனில் வேதாகமத்தில் **1 யோவான் 5:4**இல் தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் **நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று எழுதப்பட்டிருக்கிறது.**

தேவ பிள்ளைகளே! உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு சாட்சி கொடுத்த வேளையில் அவர்கள் மத்தியில் காணப்படாத திதிமு என்னும் தோமா இதை விசுவாசிக்கவில்லை அவர் மற்றவர்களிடம் அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு **அந்தக் காயத்திலே என் விரலையிட்டு என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றார்.** ஆனால் இயேசுகிறிஸ்து அவனுக்கு காட்சி கொடுத்த போது என் ஆண்டவரே என் தேவனே என்றான். இயேசு அவனுக்கு மறுமொழியாக தோமாவே **நீ என்னைக் கண்டதினால் விசுவாசித்தாய்-காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்!** என்றார். இதன்படி இன்று நானும் நீங்களும் அதிர்ஷ்டசாலிகள்! **பரி.லூக்கா 6:3,4**இல் இயேசு பயிர் வழியே நடந்து போகையில் அவருடைய சீஷர்கள் கதிர்களைக் கொய்து கைகளினால் நிமிட்டித் தின்றார்கள். பரிசேயரில் சிலர் அவர்களை நோக்கி ஓய்வு நாளில் செய்யத்தகாததான காரியங்களை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

தேவ பிள்ளைகளே! இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக **தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா?** அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் மாத்திரமே தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவ சமூகத்து அப்பங்களை கேட்டு வாங்கி தான் புசித்தது மட்டுமன்றி தன்னுடனே கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்றும் மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார். பரிசேயர்கள் சீஷர்களுக்கு விரோதமாக குறை பேசிய பொழுது அதற்கு ஆண்டவரே பதிலளித்தார். அதே போல் **இன்றும் தம் பிள்ளைக்காய் மத்தியஸ்தராய் இருந்து செயல்படுகிறார்.** தமது பிள்ளைகளுக்கு விரோதமாக வீணாக கதை பேசுபவர்கள், பிழைகள், குற்றங்கள், குறைகளை சுமத்துபவர்கள் மத்தியில் உங்களுக்காய் பரிந்து பேசுகிறவராயும் **உங்கள் மீது வீணான பொய்யான குற்றம் சுமத்தும் மனிதர்களுடைய யோசனைகளை திட்டங்களை நிர்மூலப்படுத்துவார்.** இன்றும் தேவன் உங்களோடிருக்கிறார். **இன்றைய நாள் இனிதான வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் பரலோக பிதாவே! உங்களுக்கும் எனக்கும் மத்தியஸ்தராய் விளங்குமாறு இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினவரே! அவர் மற்ற மனிதர்கள் மத்தியிலும் எனக்காய் பரிந்து பேசுகிறவராய் இருக்கின்றபடியால் நன்றி. ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; ” (பரி.யோவான் 17:12)

ஜீவ மன்னா
ஜனவரி 21
புதன்

## உங்களோடு வழக்காடுபவர்களை எதிர்க்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 30 – 31

**"இதோ, உன்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள்; உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமற்போவார்கள்."** (ஏசாயா 41:11)

அன்பு தேவ பிள்ளைகளே! ஆறுதலின் தேவனும் எம் ஜீவனுக்கு அதிபதியான ஜீவிக்கின்ற தெய்வம் **இயேசுவின் பரிசுத்த நாமத்தில் இப்புதிய நாளின் புதிய உதயலில் உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் சமாதானம் ஆளுகை செய்யுமாறு வாழ்த்துகின்றேன்.** தினந்தோறும் அதிகாலையில் தேவனின **பாதத்தில் அமர்ந்து ஜெபித்து ஆவியினால் நிரம்பி உள்ளம் பெலத்தினால் நிரம்பியிருக்குமானால் தெய்வீக சமாதானம் உங்களை ஆட்கொள்ளும் ஒவ்வொரு நாளும் ஜெயம் பெறும் நல்ல நாளாகவே இருக்கும்.** எம் இருதயம் கலக்கத்துடனும் வேதனையுடனும் யோசனையுடன் இருப்பினும் அல்லது கோபமாய் இருந்தாலும் அன்றைய தினத்தை கழிப்பது மிகக் கடினமாய் இருக்கும் என்பதை நாம் அறிவோம்.

தேவ பிள்ளைகளே! **அனுதினமும் எமது ஜீவியத்தில் நாம் சந்திக்கும் நிகழ்வுகள் மிக சோகமானதாகவும், கசப்பானதாகவும் இருக்கலாம்.** இப்படியான அனுபவத்திற்கூடாக நாம் கடந்து வரும்போது எம் இல்லத்தில் வசிப்போர், ஆத்ம நண்பர்கள், உறவினர்கள், அயல் வீட்டார்கள், ஆத்மீக சகோதர, சகோதரிகள் எமக்கு எதிராளியாக மாறலாம் ஆயினும் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** நீங்கள் ஆவிக்குரியவராக சொந்த வாழ்க்கையில் பரிசுத்தமாக வாழ்கிறவராய் இருக்கிறபடியால் மனிதர்கள் உங்களுக்கு விரோதமாய் எழும்பி அனேக குற்றச்சாட்டுகளை ஏற்படுத்தலாம். நீங்கள் பிழையற்றவராய் இருப்பினும் நீங்கள் பிழையானவர் என்பதை அயலவர்கள் அறியும்படியாக தரக்குறைவாக பேசி விவாதம் செய்யலாம். இன்றைய நாளிலும் இந்நிலையில் இருப்பவர்கள் **இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கக் கூடும். இச்சம்பவங்களை அனுபவிக்கும் பிள்ளைகளே பயப்படாதீர்கள்!** ஏனெனில் இன்றைய தினம் **ஏசாயா 41:11** தேவ வசனத்தில் "**இதோ உன் மேல் எரிச்சலாய் இருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள் உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாது போவார்கள்**" என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்பார்ந்தவர்களே! எம் மீட்பர் இயேசுகிறிஸ்து பகைவர்களை நேசிக்க எமக்கு கற்றுத் தந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து இவ்விதமாக கூறும் போது **ஏசாயா 41:11**இல் "**உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாது போவார்கள்**" என்று கூறுகிறதே இது எப்படி என்று தெரியவில்லையே என்கிறீர்களா? அவர் இப்படி கூறுவது **உங்கள் மேல் அவர் கொண்ட அன்பின் நிமித்தமே** ஏனெனில் நாள்தோறும் உலகின் துன்பங்களோடு போராடி ஆத்மீக வாழ்க்கையை நடத்தி முன்நோக்கி செல்லும் போது மனிதர்கள் சுயநோக்கத்தோடு பொய்யாக உங்களை வேதனைப்படுத்தும் போதும், **உங்களோடு வழக்காடும் போதும் அவர் வெறுமனே இருக்கமாட்டார்.** எப்படியாவது உங்களை அவர்களிடமிருந்து மீட்டுக் கொள்வார். **இன்றும் வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என்னை நேசிக்கும் பரலோக பிதாவே! என்னோடு வீணாய் வழக்காடுபவர்களை எதிர்த்து என்னை வெட்கப்படுத்தாமல் அவர்களுக்கு முன்பாய் என்னை கௌரவப்படுத்துகிறபடியால் உங்களை நன்றியுள்ள உள்ளத்தோடு துதிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...உனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடினால், அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல; எவர்கள் உனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள்." (ஏசாயா 54:15)

ஜீவ மன்னா

ஜனவரி **22**
வியாழன்

## உங்களில் மெய் அன்பு காணப்படுகிறதா?

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம் அதி: 32 – 33

**"தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்;"** (1 யோவான் 4:20)

அநாதி சிநேகத்தால் எம்மை நேசித்தவரும் காருண்யத்தால் எம்மைத் தம்மிடமாய் இழுத்துக் கொண்டவருமான **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையின் நாமத்தால் இன்றும் ஜெயம் பெற்றவர்களாய் களிகூர்ந்து மகிழ்ந்திருக்கும்படியாய் வாழ்த்துகின்றேன்.** இன்றும் நாம் ஒவ்வொருவரும் ஆத்மீகர்களாய் தேவனுக்குள் வாழ்வது எமது பரலோக பிதா எம் எம்மீது கொண்ட அளவில்லா அன்பினாலாகும். ஏனெனில் அவரின் வசனம் இவ்விதமாக கூறுகிறது..."அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தால் உன்னை சிநேகித்தேன் காருண்யத்தால் உன்னை இழுத்துக் கொள்கிறேன்" என்பதாக. **எரேமியா 31:3**

தேவ பிள்ளைகளே! தம் ஒரே பேறான நேசக்குமாரன் இயேசுகிறிஸ்துவை எம் பாவங்கள் நிமித்தமாய் தண்டனை அனுபவிக்கும்படியாக இவ்வுலகில் வந்து சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்து தம் சித்தத்தை நிறைவேற்றும்படியாக உலகிற்கு வருகை தந்த கர்த்தராகிய **எம் படைத்தவரின் அன்பு எவ்வளவு எத்தகையது என்பதை கற்றுக் கொடுத்து, எமக்காய் சிலுவை மரத்தில் தம்மையே பலியாக்கினார்.** கர்த்தர் தம்மை இயேசுகிறிஸ்துவுக்கூடாக வெளிப்டுத்தினார். தம் நேசக்குமாரன் இயேசுகிறிஸ்துவின் மூலமாக தம்மை தம் அன்பை வெளிப்படுத்தினார். அவருடைய **அநாதி சிநேகத்தால் எம்மை இழுத்துக் கொண்டார்.** இப்படியான எமது பரலோக பிதாவை எம் படைப்பின் கர்த்தரை நாம் எவ்வளவாய் நேசிக்க வேண்டும் என்று இன்றைய தின பிரதான தேவ வார்த்தை **1 யோவான் 4:20**இல் கூறுகிறது. நாம் தேவனை நேசிக்கிறோம் என்று கூறி எமது சகோதர, சகோதரிகளை வெறுப்போம் என்றால் நாம் பொய்யர்களாய் இருக்கிறோம். தேவனிடத்தில் அன்பு கூறுகிறவன் என்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனை பகைத்தால் அவன் பொய்யன். **தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான் என்றாகும்.**

தேவ பிள்ளைகளே! தேவனை நேசிக்கிறேன் என்று சொல்லுகிற ஒவ்வொருவரும் தம் சகோதர, சகோதரிகளை, பெற்றோரை அன்பு கூறவேண்டும். **நீங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டதன் நிமித்தமாக உங்களை வெறுக்கிறார்களா? உங்களை புறம்பே தள்ளி வைராக்கியம் பாராட்டுகிறார்களா?** ஆயினும் உண்மையான உள்ளத்தோடு அவர்களை அன்பு செய்ய வேண்டும். அதுமாத்திரமல்ல அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் யார் மூலமாவது உங்களுக்கு விரோதமான செயல்கள், செயல்படுத்தப்பட்டிருப்பினும் அவற்றை மன்னித்து **அவர்கள் மீது உண்மையான அன்பு செலுத்த வேண்டும்.** அப்பொழுது தான் நீங்கள் மெய்யாகவே தேவனை நேசிப்பவர்களாவீர்கள். அதே போல் **தேவனும் உங்களை அளவில்லாமல் நேசிப்பார். இன்றைய நாள் கிருபையின் நாள்!**

**ஜெபம்**

என்னை நேசிக்கும் அன்பு தகப்பனே! அநாதி சிநேகத்தால் என்னை நேசித்தவரே! என்னை அழைத்தவரே நன்றி! உங்கள் மெய் அன்பினால் என்னை நிரப்புகிறவரே நானும் முழு இருதயத்துடன் மெய்யான அன்பு கூர்ந்து உங்களுடன் ஜீவிக்க என்னை ஆசீர்வதிக்குமாறு ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்." (1 யோவான் 4:7)

ஜீவ மன்னா

ஜனவரி 23 வெள்ளி

நீங்கள் தேவனுக்கு முன்பாக உண்மையும், மன உத்தமும் உள்ளவர்களாக காணப்படுகிறீர்களா?

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 34 – 35

**"ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான்."** (ஏசாயா 38:3)

கிறிஸ்துவுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! ***ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.*** இன்றைய நாளிலும் சகல நிறைவுகளுடன் கூடிய தேவ கிருபை உங்கள் மத்தியில் கடந்து வருவதாக. நீங்கள் கல்வாரி அன்பினால் மீட்கப்பட்டு ஆவியானவரால் நடத்தப்படும் ஆத்மீக பிள்ளையாயின் ***தேவனுக்கு முன்பாக உண்மையும் மன உத்தமும் உள்ளவராய் வாழ்வது அவசியம் என்பதை சிந்தையில் கொள்ளுங்கள்.*** நீங்கள் உத்தமராய், உண்மையாய் நடக்கும் போது சகல ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்வீர்கள்.

தேவ பிள்ளைகளே! இன்றைய தேவ செய்தியின் முதல் வசனம் ***யூதா தேசத்தின் ராஜாவாகிய எசேக்கியாவின் விண்ணப்பமாகும்.*** எசேக்கியாராஜா தேவனை நித்தமும் தேடும் மனிதனாவான். அவன் தேவனைக் குறித்து நன்கு அறிந்தவன் தேவன் கூறிய வார்த்தைகள் மாறாதவைகள் என்பதையும் தெரிந்தவன் ***இவன் வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்.*** அப்பொழுது கர்த்தர் ஏசாயா என்னும் தீர்க்கதரிசி மூலமாய் அவனுடன் பேசுகிறார். ***"நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும் நீர் பிழைக்க மாட்டீர் மரித்துப் போவீர்"*** என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர் புறமாகத் திருப்பிக் கொண்டு கர்த்தரை நோக்கி ***"அ...கர்த்தாவே நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன்."*** என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணி எசேக்கியா மிகவும் அழுதான்.

பிரியமான தேவ பிள்ளைகளே! ***எசேக்கியா ராஜாவின் கண்ணீர் ஜெபத்தைக் கேட்ட தேவன் அவனுடைய ஆயுள் நாட்கள் அதிகரிக்கச் செய்தார்.*** இன்னும் பதினைந்து வருடங்களைக் கூட்டி கொடுத்தார். தேவன் இப்படியான செயலை ஏசேக்கியா ராஜாவின் வாழ்வில் நடைபெறச் செய்தது. அவனது வாழ்நாட்களில் உண்மையும் மன உத்தமுமாய் நடந்தபடியாலாகும். கர்த்தருடைய பார்வைக்கு நலமானதைச் செய்தான். ஆகையால் தேவ ஆசீர்வாதம் பெற்றான். ***எசேக்கியா ராஜா தேவனுக்கு முன்பாய் எப்படி குற்றமற்றவனாய் ஜீவித்தானோ அதே போல் நீங்களும் பரிசுத்தமாய், உத்தமமாய் வாழ்வீர்களாயின் நீங்கள் ஜெபத்தில் அவரிடத்தில் கேட்கும் விண்ணப்பம் அது எவ்வளவு பெரிதாயினும் முடியாத காரியமாயினும் அவர் அதை நிறைவேற்றுவார்.*** எசேக்கியா மரணத்தின் விளிம்பில் நின்ற போதிலும் தேவன் அவரை மீட்டுக் கொண்டார். அது பரிசுத்த வாழ்வினால் கிடைக்கப் பெற்ற வரப்பிரசாதமே. இன்று முதல் ***நீங்களும் கர்த்தருக்கு பிரியமானபடி உண்மையும், மனஉத்தமுமாய் நடந்து கொள்ளும்படி உறுதியாயிருங்கள். இன்று ஆசீர்வாதத்தின் நாள்!***

ஜெபம்

மகா கிருபை நிறைந்த பரலோக ராஜாவே! உண்மையும், மன ஊத்தமுமாய் ஜீவிப்பவர்களை ஆசீர்வதிக்கிற தேவன் என்பதை அறிந்துக் கொண்டேன். நானும் இவ்வண்ணமாக ஜீவிக்க உங்கள் ஆசீவாதத்தைப் பெற்றுக் கொள்ள ஆவியின் வல்லமையின் நிரம்புமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." (எரேமியா 29:13)

# உங்கள் இருதயத்தில் தேவ பயம் உள்ளதா?

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 36 - 37

**"சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?"** (ஆமோஸ் 3:8)

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! பரலோக பிதாவினால் இவ்வுலகிற்கு பாவம் போக்கும்படியாய் அனுப்பப்பட்ட **அன்பின் தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் மகிமையின் ஐசுவரியத்தினால் ஆசீர்வதிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.** உலகின் சகல ஜாதிகளுக்குள்ளே தேவனுடைய பிள்ளைகளாகும்படி எம்மை தெரிந்து தமது உடமையாக அவரது சுதந்தரமாக மாற்றிய ஜீவனுள்ள பரலோக பிதா உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை உணர்வீர்களா? **நீங்கள் அதே போல் அவரை நேசிப்பவராயிருங்கள்.**" உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை." என்பதாக **1 யோவான் 2:15** இல் வேத வசனம் வெளிப்படுத்துகிறது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவ பிதாவை நேசித்து அன்பு கூர்ந்து நெருங்கி ஜீவியுங்கள். நீங்கள் எவ்வளவாய் அருகிலிருக்கிறீர்களோ? எப்படி அவரை தேடுகிறீர்களோ? நீங்கள் பாக்கியவான்கள் ஆவீர்கள். **மண்ணில் ஜீவிக்கும் மனிதர்களுக்கு மிக சமீபமான தெய்வம் ஒருவர் உண்டென்றால் அது எங்கள் பரலோக தகப்பனான நித்திய பிதா மாத்திரமே.** "கர்த்தரைக் கண்டடையத் தக்க சமயத்தில் அவரை தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கி கூப்பிடுங்கள்." என்று தேவ வார்த்தை **ஏசாயா 55:6**இல் எமது செய்தியின் தலைப்பில் காணப்படும் தேவ வாக்கியம் சிங்கம் கெர்ச்சிக்கிறது யார் பயப்டாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார் யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்." என்று உரைக்கிறது. **ஆண்டவர் புவியில் மிருகங்கள், பறவைகள், ஊர்வண, புச்சி, புழுக்கள் யாவற்றையும் படைத்து பெயரிட்டு அழைத்தது எமது படைப்பின் தேவனே ஆவார்.**

தேவ பிள்ளைகளே! கர்த்தரால் படைக்கப்பட்ட மிருகங்கள் யாவற்றிற்கும் ராஜா எனப்படும் சிங்கம் வனாந்தரத்தின் ராஜா சிங்கம் என்று கூறப்படுவது வழக்கம். **இச்சிங்கமானது கெர்ச்சிக்கும்மாயின் முழுக்காடுமே அதிரும் பறவைவகள், மிருகங்கள் யாவும் பயந்து நடுங்கி ஓடி தம்மை மறைத்துக் கொள்ளும்.** இப்படி வனாந்தரத்தையே அதிரச் செய்யும் மகா பலம் வாய்ந்த **சிங்கத்தை படைத்தவர் பேசும் போது அவருக்கு முன் நாங்கள் பயப்படுகிறவர்களாய் இருக்க வேண்டுமல்லவா?** சர்வ வல்லமையின் தேவன் உங்களிடம் பேசும் போது அவருக்கு செவிகொடுத்து கீழ்படியுங்கள். தேவனுக்கு பயப்படும் பயம் உங்கள் வாழ்க்கைக்கு **பலத்த ஆசீர்வாதத்தை கொண்டு வரும். உங்களுக்கு வெற்றித் தரும் நாள்!**

ஜெபம்

என் தேவனாகிய படைப்பின் காரணரே! எம்மை மண்ணினால் உருவாக்கினவரே. நாங்கள் உங்களுக்கு முன்பாய் உங்களை குரலை கேட்டு பயப்படுகிறவர்கள் இருக்க வேண்டியவர்களாய் உள்ளோம். எங்கள் உள்ளங்களை தேவ பயத்தால் நிரம்ப எங்களுக்கு உதவி செய்யுங்கள். தேவ பயம் எங்களை ஆட்கொள்ளவும் உகந்தவர்களாய் வாழவும் அருள் புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."
(சங்கீதம் 112:1)

ஜீவ மன்னா

ஜனவரி 25 ஞாயிறு

# உங்களை உருவாக்க உரிமையுடையவர் இயேசு கிறிஸ்துவே !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 38 - 39

**"இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக்கூடாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்;..."**
(எரேமியா 18:6)

அன்பார்ந்த என் தேவ ஜனங்களே! வழுவாதபடி உங்களை காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரான ஜீவிக்கின்ற ***தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய தினம் உங்களுக்கு ஆசீர்வாதமாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.*** பரலோகத்தில் வாசம் பண்ணும் கர்த்தர் இப்புவியில் வாழும் 700 கோடி ஜனங்களுக்கு மத்தியில் அதுவும் இச்சிறிய இலங்கைத் தீவிலே வசிக்கும் உங்களை தெரிந்துக் கொண்டு அவரது சுபாவத்தை குறித்தும் அவரது சாயலைக் குறித்தும் உங்களுக்கு வெளிப்படுத்தினார். ஆகையால் ***நீங்கள் அதிஷ்டசாலிகள்!***

தேவ பிள்ளைகளே! இச் செய்தியின் பிரதான தேவ வசனம் **எரேமியா 18:6** இன்படி உங்களை படைத்த தேவன் பரத்தில் இருந்து செயல்புரியும் ஜீவனுள்ள ***தேவன் உங்களை ஒரு குயவனைப் போல் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.*** குயவன் கையில் இருக்கும் களிமண் போல் நீங்கள் ஆண்டவருடைய கரத்தில் இருப்பதால் ***குயவன் களிமண்ணைக் கொண்டு மட்பாண்டங்கள் உருவாக்குவது போல் உங்களையும் அவர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.*** இக் காரியத்தைக் குறித்து மேலும் அறிய விரும்புகிறீர்கள் என்றால் வேதத்தில் ***எரேமியா புத்தகத்தில் 18ம் அதிகாரத்தை முழுவதுமாக வாசியுங்கள்.*** அப்போது அனேகமான விடயங்களை அறிந்துக் கொள்வீர்கள். குயவன் மட்பாண்டத்தை தன் விருப்பப்படி அழகாக உருவமைக்க முனைகிறான். ***அது சரியாக அமையாவிடில் அதை உடைத்து மறுபடியும் பிசைந்து வேறு ஒரு புதிய பாத்திரமாக வனைந்துக் கொள்வான்.*** என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவன் எம்மிடம் இந்தக் குயவன் செய்தது போல் ***நான் உங்களுக்கு செய்யக் கூடாதா?*** என உங்களிடம் கேட்கிறார். ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! உலக மனிதர்கள் மெய் தேவனைக் குறித்து அறியாதிருந்தாலும், படைப்பின் தேவன் அவரென அறியாதிருந்த போதிலும் இயேசுவை ஏற்றுக் கொள்ளாத போதிலும் மனிதர்கள் யாவரும் அவர் கரத்திலிருக்கிறார்கள். ஆகையால் உலகின் துர்க்கிரிகைகளுக்கு இடங் கொடுத்து துன்மார்க்கராய் ஜீவிக்கும் போது அவர்கள் வாழ்வில் அவர்கள் அறியாதபடி விபத்துகள், ஆபத்துக்கள், துன்பங்கள், துயரங்கள், இடுக்கண்கள் நேரிடும். இவற்றை தேவன் அனுமதித்து அதன் மூலமாவது ***அவர்கள் மனந்திரும்பி வருவார்களா? என எதிர்பார்க்கிறார்.*** அப்படியும் அவர்கள் மனமாற்றம் அடையாது தேவனை ஏற்றுக் கொள்ளாவிடின் அவர்கள் துன்பம், பிரச்சினை, துயரம், ஆபத்து போன்றவற்றை அனுபவிக்கிறவர்களாய் கைவிடப்பட்டு போனாலும் அவர் இரட்சிக்க முடியாதிருக்கும். ***நீங்கள் இப்படி மனக்கடினமாய் இராதபடி தேவனுடைய கரங்களில் களிமண்ணாய் மாறி அவருக்கு உங்களை உருவாக்க இடமளியுங்கள்.*** உங்கள் வாழ்க்கை மிக அழகானதும், அலங்காரமானதும், பிரயோஜனமானதாயும் மாறிவிடும். ***மனமகிழ்ச்சியின் நாள்!***

**ஜெபம்**

என் அன்பு இயேசுவே! நான் உங்கள் கரங்களில் இருக்கும் களிமண்ணாய் இருப்பதை அறிந்தக் கொண்டேன். என் வாழ்வை உங்கள் கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன். குயவன் கையில் அலங்காரமான பாத்திரமாக என்னை உருவாக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப்போதும் என் முன் இருக்கிறது." (ஏசாயா 49:16)

ஜீவ மன்னா

ஜனவரி 26 திங்கள்

## துன்பம் சூழும் வேளையில் இயேசுகிறிஸ்துவை முன் மாதிரியாகக் கொள்வோம் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 40 – 41

**"சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்."** (பரி.மத்தேயு 26:39)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! என்னென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் ***இப்புதிய தினத்தில் உதய வேளையில் கிருபையின் ஈவுகள் உங்கள் உள்ளங்களையும், இல்லங்களையும் நோக்கி கடந்து வரும்படியாக ஆசிர்வதிக்கிறேன்.*** ஆத்மீகர்களாகிய எமக்கு ஆத்மீக ஜீவியத்திற்கு முன்மாதிரியாக, உதாரணமாக இருப்பது என மீட்பர் இயேசுகிறிஸ்துவே! எமது வேதாகமம் உரைக்கிறது. ***விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற அவரே என்று. ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!***

அன்பர்ந்தவர்களே! இயேசுகிறிஸ்து மனித உருவில் இம் மண்ணுலகில் அவதரித்தது பரலோக பிதாவின் விருப்பத்தின்படி தமது பரிசுத்த இரத்தத்தில் எங்களை கழுவி எம் பாவக்கறைகளை போக்கி எம்மை நீதிமான்களாக்கி எம் பாவத்திற்குரிய தண்டனைகளில் இருந்து எம்மை விடுவிக்கும்படியாகவே. சிலுவை பாடுகளின் ஆரம்பமாக அவர் கெத்சமனே என்னும் பூங்காவில் தம் பிதாவிற்கு ***முன் முழங்கால் படியிட்டு ஜெபித்த போது அவர் வெளிப்படுத்திய வார்த்தைகளே இன்றைய தேவ செய்தியின் தலைப்பில் காணப்படுகிறது.*** "என் பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது. என்று ஜெபித்தார். ஏனெனில் அவர் படப்போகும் பாடுகள் எங்களுக்காக நொறுக்கப்படப் போகிற சரீரத்தின் வேதனைகள் மரண வேதனை இவைகளை அவர் ஆத்மா உணர்ந்தது வியாகுலப்படத் தொடங்கியது. அவர் தம் சீஷர்களிடம் வந்து அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு ***அவர்களை நோக்கி ஒரு மணி நேரமாவது என்னோடே கூடவிழித்திருக்கக் கூடாதா?*** என்று கூறினார்.

தேவ பிள்ளைகளே! கர்த்தரின் வார்த்தைகள் வேதாகமத்தின் வெளிப்பாடுகள் சம்பூரணப்படும்படியாக இயேசுகிறிஸ்து எமக்காய் சிலுவையில் பலியானார். ***எம் விசுவாசத்தை பெலப்படுத்தும்படியாய் நாம் அவரை உதாரணமாகக் கொள்வோம்.*** ஏனெனில் எம் விசுவாசத்தை பெலப்படுத்தும்படியாகவும் எங்கள் ஆத்துமாவை பெலன் பெறச்செய்து, உறுதியாய் நாம் தரித்திருக்கும்படியாகவும் ***எம்மை சோதனைகளுக்கு இடமளிக்கிறார். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!*** என் ஆண்டவரே உங்கள் அனுமதியின்றி எந்த சோதனையும் என்னை அணுகாது நீங்கள் அனுமதிக்கும் இச் சோதனைகளில் நாம் ஜெயம் கொள்ளத்தக்கதாக என்னை பெலப்படுத்துங்கள் என்று ***ஜெபியுங்கள் அப்பொழுது உங்களுக்கு ஜெயம் நிச்சயம் உண்டு. இன்று ஜெயம் தரும் நாள்!***

ஜெபம்

என் இயேசுவே! என் ஆத்மீக பயணத்தில் எனக்கு முன் மாதிரியாக இருப்பவரே! உங்களை உதாரணமாகக் கொண்டு என் ஆத்மீக வாழ்வில் ஜெயம் பெற்றுக் கொள்ளும்படிக்கு உங்கள் ஒத்தாசை அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." (1 கொரிந்தியர் 10:13)

ஜீவ மன்னா

ஜனவரி 27 செவ்வாய்

# உங்கள் வழிகள், கிரியைகளின்படி பிரதிபலன் கிடைக்கும்!

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 42 - 43

**"...சேனைகளின் கர்த்தர் எங்களுக்குச் செய்ய நிர்ணயித்தபடியே எங்களுக்குச் செய்தாரென்று அவர்கள் திரும்பவந்து சொன்னதில்லையோ என்று சொல் என்றார்."** (சகரியா 1:6)

என் அன்பு தேவபிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த நாமத்தினால் இன்றைய இனிதே வாழும்படி **வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.** ***சிறியரில்*** ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று வாக்களித்தவர் இன்றும் உங்களோடிருக்கிறார். ஆகையால் உங்களது ஒவ்வொரு நல்ல செயலிற்கும் **நல்ல பிரதிபலனை பெற்றுக் கொள்வீர்கள் என்பது நிச்சயம். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! மற்றைய தினங்களைப் போல் உலக மனிதர்கள் யாவரும் இன்றும் அதிகாலையில் விழித்தெழுந்து தமது அன்றாட காரியங்களைக் குறித்து தீவிரமாய் செயல்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரு சிலர் இக்காலை வேளையில் தம் வாழ்வைக் குறித்து எந்த நோக்கமும் அற்றவர்களாய் **போதைக்கு அடிமைப்பட்டவர்களாக மது அருந்த ஆரம்பித்திருப்பார்கள்.** இன்னும் சிலர் எந்த வேலையும் வெறுமனே அமர்ந்து காலை நேரத்தை போக்கிக் கொண்டிருப்பார்கள். லௌகீக வாழ்க்கை வாழ்பவர்கள் எப்படியும் இருக்க முடியும். ஆனால் ஆத்மீக வாசிகள் அப்படி காலத்தை செலவழிக்க முடியாது. எம்மை படைத்த தேவன் **அனேக நன்மை நிறைந்த ஆசீர்வாதங்களை அளிப்பவராய் இருப்பதால் நாங்கள் எப்போதும் அவருடைய விருப்பப்படி செயல்புரிய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.** இன்றைய நாளின் எமது பிரதான வேதவசனம் சேனைகளின் கர்த்தர் எங்களுக்குச் செய்ய நிர்ணயித்தபடியே எங்களுக்குச் செய்தாரென்று அவர்கள் திரும்ப வந்து சொன்னதில்லையோ என்று சொல் என்றார். இதன்படி தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எனக்கும் யாவரையும் அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களின்படி வழிகளையும், செயல்களையும் கவனித்து அதற்கேற்ற பிரதிபலனை தந்தருளுவார்.

தேவ பிள்ளைகளே! அதன்படியே கீழ்படியாதவர்களாய் தேவ கட்டளைகளுக்கு விரோதமாய் **மனம் போன போக்கில் வாழ்ந்தால் அவருடைய வார்த்தைகளின் பிரகாரம் தீமையான காரியங்களுக்கூடாக தீமை நிறைந்த பிரதிபலனை பெறுபவர்களாய் இருப்பார்கள்.** ஆகையால் தினந்தோறும் அவரது வார்த்தைகளை வாசித்தறிந்து அதன்படி செயற்படுங்கள். அப்போது வார்த்தைகளின் காணப்படும் பொருத்தனைகளின்படி, **வழிகளையும், செய்கைகளையும் ஆசீர்வதிப்பார். இன்று முதல் உங்கள் வழிகளையும், செயல்களையும் குறித்து மிகக் கவனமாக இருங்கள். இன்று நல்ல நாள்!**

ஜெபம்

அப்பா பிதாவே! வார்த்தைகளின் பிரகாரம் எம் வழிகளுக்கு, கிரியைகளுக்கு பலன் தருபவரே! நானும் உங்கள் வார்த்தைகளின்படி என் வழிகளையும், செயல்களையும் நேர்த்தியாக உமக்குள் வழிநடத்த உங்கள் அனுக்கிரகத்தை கட்டளையிடுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்." (பிரசங்கி 12:14)

ஜீவ மன்னா

ஜனவரி 28 புதன்

# உங்களை வஞ்சிக்க இடங்கொடாதீர்கள்!

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 44 – 45

**"என் ஜனமே, உன்னை நடத்துகிறவர்கள் உன்னை மோசம்போக்கி, நீ நடக்கவேண்டிய வழியை அழித்துப்போடுகிறார்கள்."** (ஏசாயா 3:12)

தேவ கிருபை மிக்க தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ***இன்றைய தினம் மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையட்டும் என வாழ்த்துகின்றேன்.*** இவ்வுலகில் அந்தகாரங்களுக்கு உள்ளாகி இருளின் அதிகாரத்தில் வாழ்ந்த எம்மை ஒளியண்டையில் அழைத்து வந்த இயேசுகிறிஸ்து இன்றும் ***உங்களோடு உயிருள்ளவராய் கிரியை செய்துக் கொண்டிருக்கிறார்.*** பூமியின் அந்தகாரம் என்பது சூரிய உதயம் அற்றுப் போனால் ஏற்படும் இருள் அல்ல என்பதை நாம் அறிவோம். பகலவனின் ஒளியைப் பார்க்கிலும் மகிமையும், வல்லமையும் பொருந்திய இயேசுகிறிஸ்து உலகிற்கு ஒளியாகி எமது ஆத்துமாவை அந்தகாரத்திலிருந்து ஒளியினிடத்திற்கு கொண்டு வந்தார். ஆகையால் ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட ***சத்திய வசனம் என் ஜனமே! உன்னை நடத்துகிறவர்கள் உன்னை மோசம் போக்கி நீ நடக்க வேண்டிய வழியை அழித்துப் போடுகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.*** உங்களை சிருஷ்டித்த தேவன் உங்களை தமது சொந்த பிள்ளையாக உலகிலிருந்து பிரித்தெடுத்துள்ளார். ஆகையால் உங்கள் வாழ்வின் நன்மையைக் கருதி உங்களைக் குறித்து ***நன்மையான உயர்வான திட்டங்களை செயல்படுத்தும்படி சித்தம் கொண்டுள்ளார்.*** அது மாத்திரமல்ல உங்கள் ஆத்மீக வாழ்வின் வெற்றியை பெறும்படியாக யோசனைகளையும், வழிகளையும் கற்றுக் கொடுத்து ஜெயம் பெற்ற ஆத்மீக பாதையில் கொண்டு செல்வார். நீங்கள் ஆவிக்குரியவராயினும் எப்போதும் உலகத்தோர் மத்தியில் வாழ்பவர்களாய் இருக்கிறீர்கள். அவர்கள் மத்தியில் வாழ்வதால் அநேகருடைய புத்திமதிகளை ஆலோசனைகள், கட்டளைகளுக்கு செவி கொடுக்கவும் ***அவர்களுடன் யோசனைகளை செயல்களை பரிமாறுதல் செய்ய வேண்டி சூழ்நிலையில் இருக்கலாம்.***

அன்பார்ந்தவர்களே! அவர்கள் உலகத்தோர் ***உலக இயல்பின்படி ஜீவிப்பவர்கள் அவர்களுடைய ஆலோசனைகளை செவிமடுக்கவும், திட்டங்கள்படி நடக்கவும் மிகக் கவனமாய் இருக்க வேண்டும்.*** ஆத்மீக ஜீவியத்திற்கு இடையூறுகள் விளைவிக்கக் கூடிய எந்த செயல்களிலும், வழிகளிலும் பின்பற்றிச் செல்லாதீர்கள். வேத வசனங்களுக்கு விரோதமான மாறுதலான எந்த செயலையும் செய்யாதீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு அவசியமானதாயினும் பிரயோஜனமுள்ளதாயினும், நல்லதாயினும் மற்றவர் நல்லதென்று உரைத்தாலும் சகலவற்றையும் ***தேவ பாதத்தில் வைத்து ஜெபியுங்கள்.*** உங்கள் தேவன் உங்களுக்கு ஆலோசனை சொல்லுவார். நீங்கள் செல்ல வேண்டிய வழிகளையும் வெளிப்படுத்துவார். நீங்கள் அவரின் வார்த்தைகளுக்கு நன்றாக செவி கொடுப்பீர்களாயின் ***எவராலும் உங்கள் ஆத்துமாவை மோசம் போக்க முடியாது. ஜெயத்தின் நாள்!***

ஜெபம்

என் அன்பின் பரலோக தேவனே! எனது தேவனே! நீங்கள் எனது ஆலோசனைகளின் கர்த்தர் மனிதர்களின் குரலை அல்ல உங்கள் குரலை கேட்டு அதன்படி கீழ்படிந்து நடந்து ஜெயத்தை பெற்றுக் கொள்ளும்படி என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்." (பரி.யோவான் 9:5)

ஜீவ மன்னா

ஜனவரி 29

வியாழன்

**தேவன் மீது அன்பு கூர்ந்து அவரையே எம் பாதுகாவலராக தெரிந்துக் கொள்வோம் !**

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் அதி: 46 - 47

**"கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்."** (சங்கீதம் 145:20)

ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூருகிற யாவருக்கும் **இன்றைய நாள் நன்மையான நாளாய் அமையுமாறு இயேசுவின் வல்லமையான நாமத்தைக் கொண்டு வாழ்த்துகின்றேன்.** அன்பு என்றாலே அது தேவன் என்று உங்களுக்குச் சொல்கிறேன்......"தேவன் அன்பாகவே இருக்கிறார்." **1 யோவான் 4:8** கூருகிறது. கர்த்தர் படைத்த உயிரினங்கள், மனிதர்களிடம் இந்த அன்பின் பிணைப்பு காணப்படுகிறது. ***விஷேசமாய் இந்த அன்பு மனிதர்களிடமே அதிகமாய் காணப்படுகிறது.*** மனிதன் உலகின் தனிமையாய் ஜீவிக்க விருப்பமில்லாதவனாய் இன்னொருவரின் அன்பை வாஞ்சிக்கிறான். ***பரலோக பிதா மனிதனுடைய இருதயத்தில் அவருடைய அன்பை வைத்திருக்கிறார்.*** இதனால் தான் மனிதன் அன்பை தேடுகிறான் அல்லவா?

தேவ பிள்ளைகளே! உலகில் அநேக மனிதர்கள் அவர்கள் தேடும் ***அன்பு கிடைக்காமற் போனால் மிக வேதனைப்படுகிறார்கள்.*** மிகவும் நொந்து போனவர்களாய் உலகில் தனிமையாய் ஜீவிக்கிறார்கள். மனித அன்பு மாறிப் போகிறதும் ஏமாற்றத்துக்குரியதாயும் இருக்கிறபடியால் ***வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்கள் அனேகர் இவ்வுலகில் இருக்கிறார்கள்.*** ஆனால் மனித இருதயத்தில் அன்பு என்னும் உணர்வை ஏற்படுத்திய ஆண்டவரின் நேசம் அநாதி சதாகாலங்களிலும் எம்மை ஆட்கொள்கிறது. நீங்களும், நானும் தேவனை அறியாதிருந்த காலங்களில் இயேசுகிறிஸ்துவுக்கூடாய் எம்மை தம்மிடமாய் அழைத்து மகனே, மகளே நானே உன்னை படைத்த ***பரலோக தகப்பன் நீ என்னிடத்தில் வா என்று ஆண்டவர் எம்மை அழைத்தது அவருடைய அளவில்லா அன்பினாலேயே அல்லவா?*** நாம் அவருக்கு அன்பு செலுத்த அறியாத வேளையிலும் தேவன் எம்மை நேசித்தாரெனில் அவரை இப்போது நேசிப்பது எமது கடமையல்லவா? இன்றைய தின செய்தியின் தலைப்பு வசனம் கூறுகிறது கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றுகிறார் ......என்பதாக.

தேவ பிள்ளகைளே! ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!*** நீங்கள் தேவ பிள்ளையாயின் உங்கள் கர்த்தராகிய தேவனை இன்று முதல் ***முழு இருதயத்தோடும் அன்பு கூருங்கள்.*** அப்போது உலகின் எந்த மனிதனுமோ, உலகின் அந்தகார வல்லமைகளோ உங்களுக்கு எதிராக செயல்பட முடியாது. ஏனெனில் இவைகளிலிருந்து தேவன் உங்களை பாதுகாப்பார். ***மனிதர்களின் அன்பு வெறும் மாயையாய் இருக்கும். தம் வசப்படுத்திக்கிறதாயும் இருக்கும்.*** ஆனால் ஆனால் தேவ அன்பு ஒரு போதும் எவரும் தீங்கிழைக்க அனுமதிக்காது தேவன் சகல தீங்கிற்கும் விலக்கி எம்மை காத்தருளுவார். **இன்றைய நாள் நல்ல நாள்!**

ஜெபம்

என் அன்பின் தேவனே! உங்களில் அன்பு கூருகிற யாவரையும் பாதுகாக்கும் தேவனாய் இருப்பவரே! உங்கள் அன்பை குறித்து இச் செய்திக் கூடாய் அறிந்துக் கொண்ட என்னை இன்றைய நாள் முதல் முழு உள்ளத்தோடு உங்களை நேசிக்கவும், உங்கள் பாதுகாப்பினுள் தங்கவும் ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (பரி.யோவான் 14:23)

ஜீவ மன்னா

ஜனவரி **30**
வெள்ளி

ஆத்மீக பயணத்தில்
பின்மாற்றமடையாது
முன்னோக்கி நடவுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 48 - 49

**"ஆயியின் குடிகளையெல்லாம் சங்கரித்துத் தீருமட்டும், யோசுவா ஈட்டியை நீட்டிக்கொண்டிருந்த தன் கையை மடக்கவில்லை."**
(யோசுவா 8:26)

என் பிரியமான தேவ பிள்ளைகளே! தேவ கிருபையுடன் கூடிய இந்த **புதிய நாளின் காலைப் பொழுதின் ஆரம்ப வேளையில் ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறேன்.** உலகம் என்னும் சமுத்திரத்தின் பயணம் செல்லும் கப்பலே வாழ்க்கை என்பது ஒரு பழமொழியாகும். ஆனால் ஆத்மீகர்களை தங்கள் வாழ்வினை குறித்து இப்படி **அச்சம் கொள்ளத் தேவையில்லை** ஏனெனில் எங்கள் இரட்சகராகிய ஆண்டவர் உலகம் என்னும் சமுத்திரத்தின் மத்தியில் வாழ்க்கை என்னும் படகினை பாதுகாப்போடு முன்னோக்கிச் செலுத்துகிறார். ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

அன்பார்ந்தவர்களே! இன்றைய செய்தியின் முதல் தேவ வசனம் **யோசுவா 8:26**இல் வெளிப்படுத்துகிறது. ஆயினும் குடிகளையெல்லாம் சங்கரித்துத் தீருமட்டும் யோசுவா ஈட்டியை நீட்டிக் கொண்டிருந்த தன் கையை மடக்கவில்லை என்று **ஆயியின்பட்டணத்தை பிடிக்கும்படியாய் யோசுவாவும் ஜனங்களும் சென்ற போது ஆண்டவர் அவனோடிருந்து ஆயியின் குடிகளையெல்லாம் அழித்து போட்டார்.** அப்போது கர்த்தர் யோசுவை நோக்கி உன் கையில் ஒப்புக் கொடுப்பேன் என்றார். அப்போது **யோசுவா தன் கரங்களில் இருந்த ஈட்டியை தேவனை விசுவசித்து நீட்டியபடியால் யோசுவாவும், இஸ்ரவேலரும் யுத்தத்தில் ஜெயம் பெற்றார்கள்.** அதே போல் இன்றும் ஆத்மீக இஸ்ரவேலராகிய எம்மையும் **எமக்கு விரோதமாக கிரியை செய்யும் சகல அந்தகார வல்லமைகளிடமிருந்து** ஜெயத்தை பெற்றுக் கொள்ளுமாறு தேவன் ஒத்தாசை செய்கிறார். தேவன் யோசுவா விசுவாசத்தோடு செய்த யுத்தங்கள் அனைத்திலும் வெற்றி பெறச் செய்தார். ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!

தேவ பிள்ளைகளே! அசுத்த அவைகளினதும் சாத்தானதும் போராட்டங்களில் எமது ஆத்மீக வாழ்விற்கு எந்த பாதிப்பும் ஏற்படாதபடி இதில் வெற்றிக் கொள்ளும்படியாக தேவக் குமாரனாகிய **இயேசுகிறிஸ்து எமக்காய் மத்தியஸ்தம் பண்ணுகிறவராய் விளங்குகிறார்.** மனிதர்களுடைய கண்களுக்கு புலப்படாத எம் உள்ளத்தின் போராட்டங்களை கர்த்தர் அறிகிறார். அது மாத்திரமல்ல **உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நோய்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள், துக்கங்கள்** இவற்றிலிருந்து வெற்றியைப் பெற்றுத் தர தேவன் உங்கள் பட்சத்தில் இருக்கிறார். யோசுவாவைப் போல் அவரை விசுவாசியுங்கள் உங்கள் ஆத்மீக பயணத்தை பின் நோக்கிச் செல்லாதபடி முன்னோக்கிச் செல்லுங்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் அருமையான யோசுவாவுடன் இருந்து ஜெயம் பெற ஒத்தாசை செய்தவரே! என்னோடு அவ்வண்ணமாகவே இருந்து ஜெயம் தருபவரே நன்றி! நான் என் ஆத்மீக பயணத்தில் முன்னோக்கிச் செல்ல பெலனும், தைரியமும், தாருங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்." (ஏசாயா 45:2)

ஜீவ மன்னா

ஜனவரி **31**
சனி

**இடைவிடாமல்
தம்மை சேவிப்போரை
தீமைக்கு நீங்கலாக்கும்
சேனைகளின் கர்த்தர் !**

இன்றைய
வேதவாசிப்பு

ஆதியா: 50
யாத்திரா: 01

**"தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான்."**
(தானியேல் 6:20)

கிறிஸ்துவுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவனாகிய நம் ஆண்டவர் **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் எல்லா சவால்களையும் சமாளித்து ஜெயம் கொள்ளும்படியாக பிரார்த்திக்கிறேன்.** இவ் வருடத்தின் முதல் மாதத்தின் கடைசி தினமாகிய இன்று ஜீவ மன்னா மூலம் **உங்களை சந்திக்க தந்த கிருபைக்கும் சகல நன்மைகளுக்கும் அவருக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.** இன்றைய நாளில் தேவ வசனத்திற்கூடாய் பேசுவது நானல்ல உங்கள் தேவனாகிய ஆண்டவரே என் மூலமாய் உங்களை **பெலப்படுத்தவும் தைரியப்படுத்தவும் கிரியை செய்கிறார்.**

தேவ பிள்ளைகளே! **தானியேலின் தேவன் உங்களோடிருப்பதால் நீங்கள் பயப்படாதிருங்கள், அதைரியப்படாதிருங்கள்.** ஏனெனில் சிங்கங்கள் வாழும் குகையிலிருந்து தானியேலை காத்துக் கொண்டவர் நம் தேவனாக இருப்பினும் இதில் ஒரு விஷேசித்த காரியம் உண்டு ஏனெனில் **ராஜாவின் கட்டளையை மீறியபடியால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட்டான்.** அங்கே தேவன் அவனோடே இருந்தார். ஆண்டவர் தம்முடைய தூதர்களை அனுப்பி சிங்கங்கள் அவனுக்கு எந்த தீங்கும் விளைவிக்காதபடி அவைகளுடைய வாய்களைக் கட்டிப் போட்டார். தேவனுக்கு முன்பாக உத்தமனாய் விளங்கியபடியால் இப்படியான செயல் நடைபெற்றது. அவன் ராஜாவிற்கு விரோதமாய் எந்தவொரு காரியமும் செய்யவில்லை. ராஜாவின் கட்டளையை அறிந்த போதிலும் **தன் வீட்டுக்குள்ளே போய் தன் மேலறையில் தினந்தோறும் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினான். இதுவே அவன் செய்த குற்றமாகும்.**

தேவ பிள்ளைகளே! சிங்கக்கெபிக்கு அருகில் வந்த தரியு ராஜா துயரச் சத்தமாய் தானியேலைக் கூப்பிட்டு தானியேலே ஜீவனுள்ள **தேவனுடைய தாசனே! நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா?** என்று கேட்டான். ஏனெனில் முப்பது நாட்கள் தரியு ராஜாவை தவிர வேறு எந்தவொரு தெய்வத்திற்கோ அல்லது மனுஷனையாகிலும் யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கக் கெபியில் போடப்படுவான். என்ற **ராஜா கட்டளையை அறிந்தும் மூன்று வேளையும் தனது தேவனுக்கு ஜெபம் பண்ணினான்.** இப்படி இடைவிடாமல் தேவனை தானியேல் தேடினபடியால் அவர் சிங்கங்களின் வாய்களை கட்டி அவனை பாதுகாத்தார். **தானியேலின் தேவன் உங்களோடிருக்கிறார்.** உங்கள் துன்பம் இடுக்கண் வேளைகளில் தேவனை தேடுங்கள். அவர் உங்களுக்கு பதில் தந்து வெற்றியைத் தருவார். **வெற்றி நிச்சயம். வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் பரலோக பிதாவே! தானியேலை காத்த தேவனே! இடைவிடாமல் உங்களை நோக்கி ஜெபித்த தானியேலுக்கு துணை புரிந்தவரே நானும் எத்தகைய சோதனை ஏற்பட்டாலும் உங்களை பின் தொடர அனுக்கிரகம் தாருங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்."
(சங்கீதம் 37:23)

# கையடக்கத் தொலைபேசியின் மூலம் சுகம், அற்புதம் பெற்றுக் கொள்ள முடியும்.

## கணனி நேரடி ஒளிப்பரப்புக்கு நீங்களும் பிரவேசிக்கலாம்.



பிரியமான தேவ பிள்ளைகளே!

எங்களுடைய சுகமளிக்கும் ஆராதனை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9.30 மணியிலிருந்து நேரடி ஒளிபரப்பாகும். அவ்வேளையில் உங்களுடைய கையடக்க தொலைபேசியிலோ அல்லது கணனி நேரடி ஒளிப்பரப்பின் மூலமோ முழுமையான சுகமளிக்கும் ஆராதனையை நேரடியாக காண முடியும். இதைக் குறித்து கையடக்க தொலைபேசியில் எந்தவித பணமும் அறவிடபடமாட்டாது என்பதை கருத்திற் கொள்ளவும்.

அதற்கு மேலாக எங்களுடைய வெப் நேரடி ஒளிபரப்பின் மூலம் எல்லா நிகழ்ச்சிகளும் *USTREAM* தளத்திலே சேகரிக்கப்படுகின்றதென்பதையும் 2013 டிசம்பர் மாதத்திலிருந்து இன்றைய நாள் வரையிலான எல்லா ஆராதனைகளையும் உங்களால் காண முடியும் என்பதை அறியத்தருகிறோம்.

**எங்களுடைய கணனி நேரடி ஒளிபரப்புக்குள் பிரவேசிக்க இரண்டு முறைகள் உண்டு.**

1. Google.com » Ustream.tv » jesusnf (search) » jesusnf (click)
2. Google.com » jesusnf.org » Live Telecast

**கடந்த கால நிகழ்ச்சியினை கணனி நேரடி ஒளிபரப்பின் மூலம் காண வேண்டுமானால்**

- Google.com » jesusnf.org » Live Telecast
  வலது பக்கத்தில் கடைசியில் இருக்கும் Ustream யை க்ளிக் செய்ய வேண்டும்.



மேலதிக விபரம்: சகோதரன் திலிப் ராஜ் குமார் ☎ 077-8881823

எபல், என்ட்டோரயிட் கையடக்க தொலபேசியிலேயும் டெப் ஆகியவற்றிலும் காண்பதற்கு Ustream APP Download செய்து jesusnf என்பதை Search செய்யவும்.

Apple Android Ustream App

இரையாக அகப்பட்ட மிருக சரீரத்தின் எலும்புகளை எடுத்துக் கொண்டு மேலே ஆகாயத்தில் பறந்து மீண்டுமாக பூமியை நோக்கி பறந்து விரைந்து வந்து எலும்புகளை மலையின் மேல் போட அந்த எலும்புகள் உடைந்து பல பாகங்களாக மாறிய பின்னர் அதிலுள்ள மாமிசத்தை உண்ணுகின்ற பறவை இந்த கழுகு என்ற பறவை மாத்திரமே. இப்படியாக அநேக விஷேசித்த தன்மைகளை உடையது கழுகு ஆகும்.



**தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவனுக்குள் ஆவிக்குரிய கழுகு என்பதால் நீங்கள் விஷேசித்தவராவீர்கள்! ஆகையால் உங்கள் வாழ்வில் பிரச்சினை, உபத்திரவம், சவால்கள், சூறாவளி, புயல்கள் என்பவைகள் எதிர் நோக்கினும் நீங்கள் கழுகினைப் போன்று அவைகள் அனைத்தின் மத்தியிலும் புதிய வருடத்தில் உங்கள் வாழ்க்கையை வெற்றியின் பாதையில் நடத்திச் செல்ல முடியும். ஏனென்றால் கர்த்தருக்குக்காக காத்திருந்து புதுப்பெலன் அடைந்துள்ள நீங்கள் அனைவரும் மிகவும் அதிரஷ்டக்காரர்களாவீர்கள்!**






# இதோ!

24 மணித்தியாலங்கள்
நாள் முழுவதுமாக
உங்களுக்காகவே திறந்திருக்கும்
புத்தம் புதிய SMS சேவைகள்! 071-5382867



குறுஞ் சேவையில் உங்கள் புகைப்படத்துடன் ஜெப விண்ணப்பங்களை அனுப்ப அரிய சந்தர்ப்பம்

பிரியமானவர்களே, நீங்கள் ஒவ்வொரு நாளும் முகங் கொடுக்க வேண்டிய உங்கள் பிரச்சினைகள், இக்கட்டான நிலமைகள், வியாதிகள், உபத்திரவங்கள் என்பனவற்றை உங்கள் புகைப்படத்துடன் எந்த வேளையிலும், எந்த நேரத்திலும் **SMS** செய்தியின் மூலம் இப்பொழுது உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு அறிவித்து மத்தியஸ்த ஜெபத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்.

**SMS எழுதி அனுப்பவும். 071-5382867**

**தொலைத் தொடர்பில்லை!**

உங்களுக்கு **Android** யிலும் **Apple & micro soft** கையடக்க தொலை பேசியின் மூலம் **Whats App, Viber, Line** என்பவற்றில் மாத்திரம் உங்கள் புகைப்படத்துடன் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எமக்கு அனுப்ப முடியும்.

இதன் மூலம் உங்களின் **Voice Messages** அனுப்ப முடியும்.

Whats App | Viber | Line

## ஜீவ மன்னா தின மஞ்சரி சம்பந்தமாக

- ஜீவ மன்னா தின மஞ்சரியை தபால் மூலம் பெற்றுக் கொள்ள!
- புதிய வாசகர்கள் மன்னா மஞ்சரியை பெற்றுக் கொள்ள அவர்களின் முகவரிகளை எங்களுக்குக் கிடைக்கச் செய்யவும்!

**SMS எழுதி அனுப்பவும். 071-0714011**

**தொலைத் தொடர்பில்லை!**

**விண்ணப்பமும் பதிலும் SMS செய்தியில் மாத்திரமே!**

## ஜீவ மன்னா வாசக கட்டணங்கள், சந்தோஷ காணிக்கைகள், காசு கட்டளைகள் என்பனவற்றிற்கு!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப் என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி, கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு பற்று சீட்டை
எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N:- QD/38/NEWS/2014


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

011-2334865 071-4922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org


இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.